833

833.

தமிழ் நாட்டு

# நவீன

# வாசக

# புத்தகங்கள்

## மூன்றாம் புத்தகம்

---

(மூன்றாவது பதிப்பித்து)

மாக்மில்லன் அண்டு கம்பெனி,
லிமிடெட்.

மதராஸ், பம்பாய், கல்கத்தா, லண்டன்.

TB
031(3)
N33
86229



*Reproduced by permission of M. Vadilal & Co., Ahmedabad.*

...OF THE REGISTRAR...
17 MAY 1933
...MADRAS

தமிழ் நாட்டு
நவீன வாசக புத்தகங்கள்

# மூன்றாம் புத்தகம்

(மூன்றாவது வகுப்பிற்கு)

இது
கர்நூல் ஜில்லா, எடுகேஷனல் ஆபிஸர்
ஜி. தாமோதர முதலியார், பி.ஏ., எல்.டி.
அவர்களாலும்,
சித்தூர், சர்க்கார் சகண்டரி போதனாமுறைப் பள்ளிக்கூடத்
தலைமை ஆசிரியர்
ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.,
அவர்களாலும் இயற்றப்பட்டது.

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்,
மதராஸ், பம்பாய், கல்கத்தா, லண்டன்.
1933

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. விலை அணா 5.

# முகவுரை.

**தமிழ்நாட்டு நவீன வாசகம்** என்னும் வரிசையைச்சார்ந்த இப் புத்தகங்கள், தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப பாடசாலைகளிலும், நடுத்தரப் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களுக்காக இயற்றப் பட்டவை. இப்பாடசாலைகளில் தமிழ்மொழியைக் கற்பிக்கும் நோக்கங்கள், (i) தமிழில் எழுதியுள்ள நூல்களை மாணவர்கள் சொற்பொருள் அறிந்து தாம் வாசிக்கவும், பிறர்க்கும் பொருள் விளங்கும்படி வாசித்துக் காட்டவும் அவர்களுக்குத் திறமையுண்டாக்கல், (ii) தமிழில் தெளிவாகவும் திருத்தமாகவும் பேசவும் எழுதவும் அவர்களை வல்லவராக்கல், (iii) அவர்கட்குத் தமிழ்மொழியிற் பற்றுண்டாக்கி, அம்மொழியில் திகழும் அரிய நூல்களை ஆராயவேண்டுமென்னும் ஆவலை வளர்த்தல் என்பனவாம். இந்நோக்கங்கள் கைகூடுமாறு, நூதன முறைகளைத் தழுவி, இவ்வாசக புத்தகங்களை வெளியிட்டுள்ளோம்.

இத்தொடர்ப் புத்தகங்களில் விஷயமும் நடையும் படிப்படியாக உயர்ந்துகொண்டே செல்வதால், மாணவர்கள் தேர்ச்சியும் படிமுறையில் வளர்ந்துவருவதற்கு வேண்டிய வசதி அமைந்திருக்கின்றது. வாசக பாடமூலமாய்ப் பிரபஞ்ச ஞானம், தேசாபிமானம், நல்லொழுக்கம் முதலிய நலங்கள் சிறுவர்களுக்கு வாய்க்கவேண்டுமென்பது அறிஞர்கள் கொள்கை. இதற்கிணங்க இப்புத்தகங்கள் இயற்கைப் பொருள்களின் விவரம், அரசியல்முறை, சுகாதார வாழ்க்கை விதிகள், பெரியார் வரலாறு, நீதிக்கதைகள் முதலியவற்றைச் சிறுவர்க்கேற்றவாறு கூறும் பல பாடங்களைத் தம்மகத்தேகொண்டுள்ளன. இரண்டாவதுமுதல் ஐந்தாவதுவரையுள்ள புத்தகங்களில்,ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும், அதில் வந்துள்ள அரியசொற்களும், மாணவர் அறிவைக் கூர்மைப்படுத்துவதற்கு ஏற்ற வினாக்களும் குறிக்கப் பட்டுள்ளன. நான்காவது ஐந்தாவது புத்தகங்களில், சுலபமான இலக்கணக் குறிப்புகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு புத்தகத்தின் இறுதியிலும், வகுப்புக்கேற்ற நீதிச் செய்யுட்களும், தோத்திரப்பாடல்களும் சேர்க்கப்பட்டுள.

தமிழுலகம் இவ்வாசக புத்தகங்களை ஆதரிக்குமென்னும் நம்பிக்கையுடன் இவற்றை வெளியிடுகின்றோம்.

*மதராஸ்,*
January 1933 } மாக்மில்லன் அண்டு கம்பெனியார்.

# பொருள் அட்டவணை.

## முதற் பகுதி. வாசக பாடம். (Prose.)


| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஆடு.—The Sheep | 1 |
| 2. | விவசாயம்.—Agriculture | 3 |
| 3. | காவிரி.—The Caveri | 7 |
| 4. | இராமதாசர்.—Ramdoss | 10 |
| 5. | வீட்டு மிருகங்கள் (க).—Domestic Animals (1) | 13 |
| 6. | வீட்டு மிருகங்கள் (உ).—Domestic Animals (2) | 15 |
| 7. | வீட்டு மிருகங்கள் (ங).—Domestic Animals (3) | 18 |
| 8. | டாணுக்காரன்.—The Policeman | 20 |
| 9. | சென்னைப் பொருட்காட்சிச்சாலை. — The Madras Museum | 23 |
| 10. | ரெயில் பிரயாணம்.—A Railway Journey | 25 |
| 11. | பச்சையப்ப முதலியார்.—Pachaiyappa Mudaliar | 30 |
| 12. | திருஞானசம்பந்தர் தேவாரம் பாடியது.—Tirugnanasambandar | 33 |
| 13. | நமது உடை.—Our Dress | 36 |
| 14. | தீபாவளி.—The Deepavali Feast | 38 |
| 15. | வாசனைப் பொருள்கள்.—Spices | 41 |
| 16. | பொள்ளாச்சிச் சந்தை.— The Shandi at Pollachi | 44 |
| 17. | திருக்கழுக்குன்றம்.—Tirukkalukkundram | 49 |
| 18. | கிராம பஞ்சாயத்து.—Village Panchayat | 54 |
| 19. | திருச்சி மலைக்கோட்டை. — The Rock Fort of Trichinopoly | 57 |
| 20. | சென்னை மிருகக்காட்சிச்சாலை. — The Madras Menagerie | 60 |
| 21. | நடவும் அறுவடையும். — Transplantation and Harvest of Rice | 64 |
| 22. | பழனி.—The Palni Hills | 67 |
| 23. | சுகாதாரம்.—Hygiene | 71 |
| 24. | ஸ்ரீ ஆண்டாள்.—Sri Andal | 73 |
| 25. | தபாலாபீஸ்.—The Post Office | 77 |

## இரண்டாம் பகுதி. செய்யுட் பாடம். (Poetry.)


| | | |
|---|---|---|
| கொன்றைவேந்தன் | ... ... ... | 81 |
| வெற்றிவேற்கை | ... ... ... | 83 |
| தோத்திரத் திரட்டு. விநாயகர் துதி | ... ... | 87 |
| சரஸ்வதி சிந்தனை | ... ... | 87 |
| சிவபெருமான் துதி | ... ... | 88 |
| திருமால் துதி | ... ... | 89 |
| முருகர் துதி | ... ... | 90 |

# தமிழ்நாட்டு நவீன வாசகம்.

# மூன்றாம் வாசக புத்தகம்.

OFFICE OF THE REGISTRAR OF
17 MAY 1933



## 1. ஆடு.

இந்தப் படத்திலுள்ளவை என்ன பிராணிகள்? இவை ஆடுகள். ஆடுகளைச் சாதாரணமாய் எங்கும் காணலாம். ஆட்டில் செம்மறியாடு, வெள்ளாடு என்று இரண்டு வகை உண்டு.

ஆடு மிகவும் சாதுவான ஜந்து. அது பசுவைப் போலவே புல், இலை, தழை முதலியவற்

றைத் தின்னும். ஆடு மேய்ப்பவர்கள் ஆடு களைப் புல் நிறைந்த காடுகளிலும், வெளியிடங் களிலும் மேய்த்துவிட்டுச் சாயங்காலம் வீட்டுக்கு ஓட்டிவருவார்கள்.

ஆட்டிற்குக் கால் நீண்டும், குளம்பு பிளவு பட்டும் இருக்கும். ஆகையால், ஆடு வேகமாய் ஓடும்; உயர்ந்த மலைகளின்மேலும் கஷ்டமில்லா மல் ஏறும்.

ஆட்டின் பால் நல்ல உணவாகும். அதைக் குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும், நோயா ளிகளுக்கும் கொடுக்கலாம். ஆடு இன்னும் பல விதமாகவும் மனிதனுக்கு உபயோகமாகிறது. அதன் மாமிசத்தைப் பலர் உண்ணுகிறார்கள். அதன் தோல், பை, பெட்டி, பாதரக்ஷை முத லிய சாமான்கள் செய்ய உதவுகிறது. ஆட்டின் குளம்பை உருக்கி வச்சிரம் செய்யலாம். இதைக் கொண்டு மரத்துண்டுகளை ஒட்டலாம்.

ஆட்டின் உடல் முழுதும் மயிர் அடர்ந்திருக் கும். குளிர்ப் பிரதேசங்களிலுள்ள ஆடுகளுக்கு மயிர் அடர்ந்திருப்பதோடு நீளமாகவும் இருக் கும். ஆட்டை வளர்ப்போர் கோடைகாலத்தில் அதன் மயிரைக் கத்தரிப்பார்கள். ஆட்டின் மயிர் நேர்த்தியான கம்பளங்கள், சால்வைகள் முதலி யன நெய்யப் பயன்படும்.

ஆட்டின் சிறுநீரும் சாணமும் வயல்களுக்கு நல்ல எருவாகும். இதற்காகக் குடியானவர்கள்

ஆட்டுமந்தைகளை வயல்களில் கடைக்கட்டி வைப்பார்கள்.

கேள்விகள் :—வெள்ளாட்டுக்கும் செம்மறி யாட்டுக்கும் காணப்படும் வித்தியாசங்கள் யாவை? ஆட்டின் கழுத்தில் என்ன தொங்குகிறது? அதற்கு என்ன பெயர்? ஆட்டை 'எளியோர் பசு' என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? ஆட்டின் உபயோகங்களைச் சுருக்கமாகச் சொல்லுக.

கடின பதங்கள்:—ஜந்து, முதியோர், பாதரக்ஷை, பயன்படும், சிறுநீர், மந்தை, கடை.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 2. விவசாயம்.

சிறுவர்களே, நமது கிராமத்தைச் சுற்றிலுமுள்ள வயல்களைப் பாருங்கள். இவ் வயல்களில் நம் ஊரார் பரம்பரையாய் நெல் பயிரிட்டு வருகிறார்கள்.

வெய்யிற்காலத்தில் வயல்களைப் பார்த்திருக்கிறீர்களா? அக்காலத்தில் வெய்யிலாலும், காற்றாலும், பூமி உலர்ந்து பாளம் பாளமாய் வெடித்திருக்கும். அப்போது அதன்மீது வெறுங்காலோடு நடப்பது நமக்குக் கஷ்டமாயிருக்கும். நிலம் எவ்வளவுக்கு எவ்வளவு உலர்ந்து வெடிக்



கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. வெடிப்பின் வழியே சூரிய வெப்பமும், காற்றும் நுழைந்து, மண்ணைச் செழிப்புள்ளதாக்கும். அந்த நிலம் அதிகமான நீரையும் இழுக்கும்.



மழை பெய்து நிலம் ஊறியிருக்கும்போது குடியானவர்கள் அதை உழுவார்கள். சாதாரண கலப்பையால் உழுதால், மண் ஆறு அங்குல

ஆழத்திற்கே புரளும். புதுமாதிரியான கலப்பையால் உழுதால், ஒன்பது அங்குலம் முதல் ஒரு அடி வரையில் புரளும். ஆழமாய் உழுதால் தான் நெல் அதிகமாய் விளையும்.




A { புதுமாதிரியான கலப்பை.
B { சாதாரண நாட்டுக் கலப்பை.

பயிர் நன்றாய் வளரும் பொருட்டு, குடியானவர்கள் நிலத்திற்கு எருப்போடுவார்கள். சாம்பல், குப்பை, சாணம் இவை பெரும்பாலும் எருவாய் உபயோகப்படுகின்றன. சிலர் வயலில் பச்சைத் தழையைப் போட்டு மிதிக்கிறார்கள். சிலர் பிண்ணாக்கு, மீன் எரு, எலும்பு எரு இவற்றையும் உபயோகப்படுத்துகிறார்கள். நிலத்தின் பாங்குக்கு ஏற்ற எரு எதுவென்று அறிந்து, அதைப் போடவேண்டும்.

நிலத்தை உழுது எருவிட்டபின், விவசாயிகள்

நாற்று நடுவார்கள். பின்பு அப்போதைக்கப் போது நீர் பாய்ச்சிக் களை பிடுங்குவார்கள். சில மாதங்களுக்கெல்லாம் நெற்கதிர்கள் தோன்றி முற்றும். அப்போது அறுவடை செய்து நெல்லைப் பெறுவார்கள்.

கரிசல் நிலத்தில் நெல் பயிராகாது; பருத்தி விளையும். செம்மண்ணும் கொஞ்சம் மணலும் கலந்த பூமியில், நெல் நன்முய் விளையும்.

சாகுபடி செய்யும் விஷயத்தில் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் நமக்கு வேண்டிய உதவி செய்து வருகிருர்கள். நிலத்தின் பாங்கு இன்னது என்றும், அதற்கு ஏற்ற எரு இது என்றும், அவர்கள் ஆராய்ந்து சொல்லுவார்கள். அவர்களிடமிருந்து நல்ல விதை நெல்லை வாங்கலாம். பயிருக்குச் சேதத்தை விளைவிக்கும் பூச்சிகள் முதலியவற்றைத் தடுப்பதைப் பற்றியும் அவர்களிடமிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம்.

கேள்விகள்:—வயல்களுக்கு நீர் எங்கிருந்து வருகிறது? எந்த மாதங்களில் வயல் தரிசாயிருக்கும்? வயல்களுக்கு நாற்று எங்கு பயிராகின்றது? நெல்விளையும் நிலத்தை என்ன நிலம் என்பார்கள்? பருத்தி விளையும் நிலத்தை என்ன நிலம் என்பார்கள்? புன்செய்ப் பயிர்கள் யாவை? வயல்களில் நெற்பயிர்களுக்கு இடையே முளைப்பவை எவை? அவற்றை என்ன செய்யவேண்டும்? நெற்கதிரிலிருந்து தானியத்தை எப்படிப் பிரிக்கலாம்? நெல் நீங்கின தாளுக்கு என்ன பெயர்? அதன் பிரயோஜனம் யாது?

கடின பதங்கள்:—பரம்பரை, பாளம், வெப்பம், செழிப்பு, பெரும்பாலும், பாங்கு, ஏற்ற, அறுவடை, சாகுபடி, ஆராய்ந்து, சேதம்.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# 3. காவிரி.

சோழ நாட்டை "நெற்களஞ்சியம்" என்று சொல்லும்படி செய்வது காவிரி ஆறு என்று இரண்டாம் புத்தகத்தில் படித்தோம். இந்த ஆறு, குடகு நாட்டில் தலைக்காவேரி என்னும் இடத்தில் உற்பத்தியாகிறது. வெகுதூரம் வரையில் இது ஒரு சிறிய கால்வாயாகவே ஓடுகிறது. பின்பு அகலமாகிக்கொண்டே வந்து, திருச்சிராப்பள்ளிக்கருகில் காவிரி, கொள்ளிடம் என்ற இரண்டு பெரிய நதிகளாகப் பிரிகிறது. அவ்விடத்தில் அரசாங்கத்தார் ஒரு பெரிய அணை கட்டி இருக்கிறார்கள். அதன் கீழ்ப்பாகத்திலும் அங்கங்கே அணைகள் கட்டி நதியைப் பல கிளைகளாக ஓடும்படி செய்திருக்கிறார்கள்.

காவிரி ஒரு ஜீவநதி. அதில் எந்நாளும் நீர் வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கும். ஆகவே, அதன் நீரை அங்கங்கே ஏரிகளில் தேக்கிப் பிறகு நிலங்



களுக்குப் பாய்ச்சவேண்டிய அவசியம் இல்லை. அதிலிருந்து பல கால்வாய்கள் மூலமாய் நிலங்களுக்குப் பாய்ச்ச நீர் கொண்டுபோகப்படுகின்றது.

காவிரி, கிழக்குக் கடலில் சங்கமமாகிறது. கடலோடு கலக்கும் இடத்தில் பார்த்தால், அது ஒரு சிறு வாய்க்கால் போல்தான் இருக்கும். அதன் நீர் கொஞ்சங்கூட வீணுகாமல் உபயோகப்படும்பொருட்டு, அரசாங்கத்தார் பெரும் பொருள் செலவு செய்து, மேட்டூரில் ஒரு பெரிய அணையைக் கட்டிவருகிருர்கள். அவ்விடமிருந்து, கால்வாய்களின் வழியே, தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள வறண்ட நிலப் பகுதிகளைச் சாகுபடி செய்வதற்கு, ஆற்று நீரைக் கொண்டுபோகப் போகிருர்கள். இந்தக் கால்வாய்களின் உதவியால் இலக்ஷக்கணக்கான ஏகரா நிலங்கள் சாகுபடிக்கு ஏற்றவையாகும்.

காவிரியாறு சோழநாட்டைச் சேருமுன், மைசூர் இராஜ்ஜியத்தின் வழியே ஓடுகிறது. அங்கு, மலைப்பிரதேசமான சிவசமுத்திரம் என்னுமிடத்தில், அது மலையினின்றும் கீழே வெகு வேகமாய் விழுகிறது. இப்படி உயரத்திலிருந்து நீர் விழுவதற்கு நீர்வீழ்ச்சி என்று பெயர். இவ்விடத்தில் மைசூர் அரசாங்கத்தார் பெரிய இயந்திரசாலை ஒன்று கட்டியிருக்கிருர்கள். பெரிய உருளைகளை நீர்வீழ்ச்சியின் நடுவில் அமைத்து, நீர்விழும் வேகத்திளுல் சக்கரங்கள் சுழலும்படி ஏற்பாடு செய்திருக்கிருர்கள். அந்தச் சக்கரங்கள் சுழல்வதால் இயந்திரம் வேலை செய்கிறது. அதிலிருந்து மின்சாரம் உண்டாகிறது. இந்த மின்

சாரம் கம்பியின் மூலமாய்ப் போய், மைசூர், பெங்களூர் பட்டணங்களில் மின்சார விளக்குகள் ஏற்றவும், இயந்திரங்கள் ஓட்டவும் பயன்படுகிறது. இதனால் மைசூர் இராஜ்ஜியத்துக்கு அதிக வருமானம் கிடைக்கிறது.

கேள்விகள் :—காவிரியாற்றின் குறுக்கே கட்டியுள்ள அணைக்கட்டுகள் எவை? காவிரியாற்றின் கிளைநதிகள் எவை? அணைக்கட்டுகள் கட்டுவதின் நோக்கம் என்ன? மின்சார சக்தியை எப்படி எல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம்?

கடின பதங்கள்: — உற்பத்தி, ஜீவநதி, சங்கமம், வறண்ட, பகுதி, பிரதேசம், நீர்வீழ்ச்சி, வருமானம்.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறு வாக்கியத்தில் உபயோகித்து எழுதுக.

## 4. இராமதாசர்.

கிழக்குக் கோதாவரி ஜில்லாவில், பத்திராசலம் என்ற ஒரு புண்ணிய ஸ்தலம் கோதாவரி நதிக் கரையை ஒட்டி இருக்கிறது. இது பல வருஷங்களுக்கு முன் ஹைதராபாத் இராஜ்ஜியத்தைச் சேர்ந்திருந்தது.

இராமபிரான், தமது தம்பி இலக்ஷ்மணரோடும், மனைவி சீதாபிராட்டியோடும் வனவாசம்

செய்தபோது, சிறிதுகாலம் பத்திராசலம் என்னும் இத்தலத்தில் தங்கியிருந்தார். அதனால் இது ஒரு புண்ணிய க்ஷேத்திரமாயிற்று.

இத்தலத்தில், முன்னொருகாலத்தில், இராமதாசர் என்றொரு இராமபக்தர் இருந்தார். அவர் முதலில் ஹைதராபாத் நவாபிடம் தாசில் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். அவருக்கு இராமபிரானிடம் மிகுந்த பக்தி ஏற்படவே, தாம் வசூல் செய்த வரிப்பணத்தை நவாபுக்கு அனுப்பாமல், அதைக்கொண்டு பத்திராசலத்தில் இராமபிரானுக்கு ஒரு கோயில் கட்டினார். அதில் இராமர், சீதை, இலக்ஷ்மணர் முதலியோருடைய விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தார். அதோடு அந்த விக்கிரகங்களுக்கு விலை உயர்ந்த திருவாபரணங்கள் செய்து பூட்டி ஆராதனை பண்ணிவந்தார். பாகவதர்களுக்கும் பொருள் உதவி செய்தார்.

இப்படி இராமதாசர் வரிப்பணத்தை வாரிச் செலவழித்து வந்தது நவாபுக்குத் தெரிந்தது. அரசாங்கப் பணத்தைத் தம் உத்தரவின்றிக் கையாண்டதற்காக, நவாபு இராமதாசரைச் சிறையில் இட்டார்.

இராமதாசர் அன்ன ஆகாரங்கொள்ளாமல், சிறையில் மிகவும் வருந்தினார். அப்போதும் இராமபிரானையே அன்போடு துதிசெய்து வந்தார். இராமருக்குத் தமது அடியவர் படும் துயரத்

தைக் காணச் சகிக்கவில்லை. ஆகையால் இலக்ஷ்மணரோடு தாமும் மனித உருவங்கொண்டு, நவாபிடம் வந்து, இராமதாசர் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்திச் சென்றார்.

மிகுந்த முகவிலாசத்துடனும் கம்பீரமான தோற்றத்துடனும் வந்து, இராமதாசருக்காகத் தொகையைச் செலுத்திச்சென்ற பெரியோர்கள் இன்னார் என்று நவாபுக்கு அச்சமயம் விளங்கவில்லை. பின்புதான், அவர்கள் இராம லக்ஷ்மணர்கள் என்பது தெரியவந்தது. அப்போது, தாம் இராமதாசரைத் துன்பஞ் செய்ததற்காக நவாபு மிகவும் வருந்தி, அவரைச் சிறையினின்றும் விடுவித்தார். அப்பால் அவரது பக்திக்கு மெச்சி, அவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்களுக்குப் பூஜை, உற்சவம் முதலியன சிறப்புடன் நடைபெறுவதற்கு வேண்டிய பொருளை அரசாங்க பொக்கிஷத்திலிருந்தே கொடுத்து வரும்படி ஏற்பாடு செய்தார். இராமதாசருக்கு உபகாரச்சம்பளமும் கொடுத்தார்.

இராமதாசர், தமக்குக் கிடைத்த உபகாரச் சம்பளத்தைக் கொண்டு தரும காரியங்களை நடத்தி, தம் வாழ்நாள் முழுவதையும் இராம கைங்கரியத்தில் செலவிட்டு, இன்பமாய்க் காலங்கழித்து வந்தார்.

கோயில் கட்டுவது சிறந்த புண்ணியச் செயல்தான். ஆனால், அதற்காகப் பிறர் பொருளை

அவர் உத்தரவில்லாமல் செலவிடுவது சரியல்ல. அதனால்தான் இராமதாசர் சிறிது காலம் சிறையில் வருந்த நேர்ந்தது.

கேள்விகள் :—இராமர் ஏன் வனவாசம் சென்றார்? இராமதாசர் இராமர் கோயிலைப் பத்திராசலத்தில் ஏன் கட்டினார்? இராமதாசரை நவாபு ஏன் சிறையிலிட்டார்? நவாபுக்கு இராமதாசரின் பெருமை எப்படித் தெரிந்தது?

கடின பதங்கள் :—ஸ்தலம், வனவாசம், க்ஷேத்திரம், பக்தர், அமர்ந்திருந்தார், பக்தி, விக்கிரகம், பிரதிஷ்டை, திருவாபரணம், ஆராதனை, பாகவதர், கையாண்டது, சிறை, துதி, அடியவர், துயரம், சகிக்கவில்லை, முகவிலாசம், கம்பீரமான, தோற்றம், பொக்கிஷம், கைங்கரியம்.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# 5. வீட்டு மிருகங்கள்—(க)

அடுத்த படத்தில் காணப்படுவது எருது. நாம் வீட்டில் சாதாரணமாய் வளர்க்கும் மிருகங்களில் எருது ஒன்று.

எருதுக்குக் காளை என்றும் பெயர். காளையில் பல ஜாதிகள் உண்டு. அவை உயரம், பருமன், சக்தி இவற்றில் வேறுபடும். நல்ல ஜாதி எருதுகள், வடக்கே ஆந்திர தேசத்திலும்,



மேற்கே கோயம்புத்தூர் ஜில்லாவிலும், மிகுதி யாய் அகப்படும். அவை மிக்க அழகாயும், விலை உயர்ந்தவையாயு மிருக்கும்.

நாம், எருதுகளை வண்டியில் பூட்டிச் சவாரி செய்யவும், சுமைகளை இழுக்கவும், உபயோகிக் கிறோம். நிலங்களை உழுவதற்கும், நாம் எருது களை ஏரில் கட்டி ஓட்டுகிறோம். மேலும், அவை, கவலை ஓட்டுவதற்கும், வைக்கோல்போர் அடிப்ப தற்கும் பயன்படுகின்றன. சில இடங்களில் வியா பாரிகள் எருதுகளின்மீது சுமைகளை ஏற்றிக் கொண்டு ஊரூராய்ப் போவார்கள். இம்மாடு களுக்குப் பொதிமாடுகள் என்று பெயர்.

எருதுகள் வைக்கோல், புல் முதலியவற்றைத் தின்னும். சிலர் அவைகளுக்குப் பருத்திக்கொட் டை, தவிடு, பிண்ணாக்கு முதலியவற்றையும் தீனி யாக வைப்பார்கள்.

சாலைகளில் நடக்கும்போது குளம்பு தேயாமலிருப்பதற்காக நாம் எருதுகளுக்கு லாடம் கட்டுகிறோம். அழகுக்காக, நாம் அவற்றின் கழுத்தில் சலங்கை, மணி முதலியவைகளை மாலையாகக் கட்டுகிறோம். கொம்புகளுக்குக் குப்பி அடிக்கிறோம்.

எருதுகளை வேகமாக நடத்துவதற்காகச் சிலர் சாட்டையால் கொடுமையாய் அடிப்பார்கள்; சிலர் தார்க்குச்சியால் குத்துவார்கள். அப்படி அவற்றை வருத்துவது பாவமாகும்.

கேள்விகள் :—எருதுக்குக் கொம்புகளாலும் வாலாலும் என்ன உபயோகம்? கோயில்களில் எருதுகளை எதற்காக வளர்க்கிறார்கள்?

கடின பதங்கள் :—பருமன், பூட்டி, வியாபாரி, தீனி, குப்பி.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 6. வீட்டு மிருகங்கள்—(உ)

எருதைப்போல் குதிரையும் நமக்குப் பல வகையிலும் உபயோகப்படுகிறது. அதனால்தான் பலர் குதிரையை வீடுகளில் வளர்க்கிறார்கள்.



குதிரை, பார்ப்பதற்குக் கம்பீரமாயும், அழகாயும் இருக்கும். அதன் விலை எருதின் விலையை விட அதிகம். எருதுக்கும் குதிரைக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை? எருதுக்குக் கொம்புகளுண்டு; குதிரைக்குக் கொம்புகளில்லை. எருதின் வால், உருண்டு நீண்டு நுனியில்மட்டும் மயிர் அடர்ந்ததாயிருக்கும்; குதிரையின் வால் முழுதும் மயிர் செறிந்து இருக்கும். குதிரையின் கழுத்தில் மயிர் அடர்ந்து வளர்ந்து தொங்கும். இதற்குப் பிடரி மயிர் என்று பெயர். எருதுக்குப் பிடரி மயிர் இல்லை. எருதின் குளம்புகள் பிளவு பட்டிருக்கும்; குதிரையின் குளம்புகள் பிளவுபட்டு இரா.

குதிரை, சவாரி செய்வதற்கும், வண்டி இழுப்பதற்கும் உதவும். குதிரை எருதைவிட வேக

மாய்ச் செல்லும். ஆனால், மண்சாலைகளிலும், செப்பனிடாத பாதைகளிலும் போவதற்கு அது ஏற்றதல்ல. எருதுக்குக் கட்டுவதுபோல் குதிரைக்கும் லாடம் கட்டுவது உண்டு. மேல் நாடுகளில் உள்ளவர்கள் குதிரைகளை ஏரில் பூட்டி நிலத்தை உழுகிறார்கள். குதிரையின் மீது சுமைகளை ஏற்றி ஊரூராய் ஓட்டிக்கொண்டு போகிறார்கள். மலை நாடுகளில் பிரயாணம் செய்வதற்குக் குதிரை ஏற்றது. அது கூர்மையான அறிவுள்ளது. சர்க்கஸ் நடத்துவோர், அதைப் பல அருமையான வேடிக்கைகள் செய்துகாட்டப் பழக்கி இருக்கிறார்கள்.

குதிரை புல் தின்னும். வேகவைத்த கொள்ளு அதற்கு வெகு பிரியம். எருதுகள் புல் மேய்வதையும், குதிரைகள் புல் மேய்வதையும் கவனித்துப் பார். எருது புல்லை இழுத்துப் பிடுங்கி, மெல்லாமலே விழுங்கும். பிறகு, தின்றதை வாய்க்குக் கொண்டு வந்து அசைபோடும். குதிரை, தன் பற்களால் புல்லைக் கடித்துக்கொண்டு நன்றாய் மென்று தின்னும்.

குதிரையையும் நாம் அன்பாய் வளர்க்கவேண்டும். அதை அடிப்பதும், அளவுக்கு மிஞ்சிய பாரத்தை இழுக்கச் செய்வதும் கொடுமையாகும்.



# 7. வீட்டு மிருகங்கள்—(ந)

இந்தப் படத்தைப் பார். இதில் இருப்பது ஒரு கழுதை. கழுதை, பார்வைக்குக் குதிரை யைப் போலிருந்தாலும், அது குதிரையைப் போல் அழகும், கம்பீரமும், புத்தி கூர்மையும் உள்ள பிராணியல்ல.

கழுதைகளைச் சாதாரணமாய் வண்ணார் வீடு களில் காணலாம். அவர்கள் கழுதைகளின்மீது அழுக்குமூட்டைகளை ஏற்றிக்கொண்டு துறைக்குப் போவார்கள். துணிகளை வெளுப்பதற்கு வேண் டிய உவர்மண்ணைச் சுமப்பதற்கும் அவர்கள் கழுதைகளையே உபயோகிக்கிறார்கள். கல் ஒட்டர்

கள் கழுதைகளின்மீது உரல், அம்மி முதலிய கல்சாமான்களை ஏற்றிக்கொண்டு ஊரூராய்ப் போவதும் உண்டு.

கழுதை இவ்வளவு உபயோகமுள்ள பிராணியாய் இருந்தாலும், வளர்ப்பவர்கள் அதை வீட்டில் கட்டிவைத்து நன்றாய்த் தீனிபோடுவதில்லை. சுமை சுமக்காதபோது கழுதையை அவிழ்த்து விட்டு விடுவார்கள். அது வயல், கொல்லை முதலிய விடங்களில் புல் மேய்ந்து பசியாற்றிக் கொள்ளும்.

சில பிள்ளைகள் கழுதைகளைப் பலவிதமாகவும் தொந்தரவு செய்வார்கள். வாயில்லாப் பிராணிகளை வீணாய் வருத்துவது தகாது.

கேள்விகள் :—குதிரை, கழுதை இவையிரண்டும் தங்களைப் பகைவர்களிடமிருந்து எப்படிக் காப்பாற்றிக் கொள்ளுகின்றன? கோயில்களிலும், மடங்களிலும், குதிரைகளை எதற்காக வளர்க்கிறார்கள்? குதிரைப்பந்தயம் என்றால் என்ன? வண்ணார் கழுதையின் கால்களை ஏன் கட்டி விடுகிறார்கள்?

கடின பதங்கள்:—செறிந்து, பிடரி, செப்பனிடாத, கொடுமை, புத்திகூர்மை, துறை, உவர்மண், தொந்தரவு, தகாது.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.



## 8. டாணாக்காரன்.

நீ டாணாக்காரனைப் பார்த்திருக்கிறாயா? எல்லா ஊர்களிலும் டாணா இருக்காது; பெரிய கிராமங்களிலும், பட்டணங்களிலும் மாத்திரமே காணலாம்.

இந்தப் படத்தில் காணப்படும் டாணுக்கார னைப்பார். ஒவ்வொரு டாணுவிலும் பல டாணுக் காரர்கள் இருப்பார்கள். இவர்களுக்குத் தலைவ ராக ஒரு சப்-இன்ஸ்பெக்டர் இருப்பார். அவர் ஊரில் இல்லாதபோது தலைமை டாணுக்காரன் (ஹெட் கான்ஸ்டெபில்) அவர் வேலையைக் கவ னிப்பான்.

டாணுக்காரனால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. சப்-இன்ஸ்பெக்டர் தமது வட்டத்தி லுள்ள கிராமங்களுக்கு டாணுக்காரர்களை அனுப்பி, அங்குள்ள விசேஷங்களைத் தெரிந்து கொள்ளுவார். டாணுக்காரன் கிராமங்களுக்குப் போகும்போது, அங்குள்ள மணியக்காரர் அல் லது பெரியதனக்காரரிடம் கையொப்பம் பெற வேண்டும். இது இவனது தினசரி வேலை.

கிராமத்தில் கொலை, களவு முதலிய குற்றங் கள் நடந்தால், டாணுக்காரன் மணியக்காரர் மனு வைப் பெற்றுக்கொண்டு, தான் வைத்திருக்கும் குறிப்புப் புத்தகத்தில் அவற்றைக் குறித்துக் கொள்வான். அதற்குப் பின், சப்-இன்ஸ்பெக் டர் அவைகளைப் பற்றிய மேல் நடவடிக்கைகளை நடத்துவார்.

பெரிய பட்டணங்களில் பல சாலைகள் கூடும் இடங்களில் டாணுக்காரர்கள் நிற்பதை நீ பார்த் திருக்கிறாயா? இவர்கள் அங்கே நின்றுகொண்டு வண்டிகளின் போக்கு வரவை ஒழுங்காய் நடத்து

வார்கள். வண்டிகளால் ஆபத்து நேராதிருப்ப தற்காக, கால் நடையாய்ப் போவோரையும் ஒரு புறமாய்ச் செல்லும்படி செய்வார்கள். யாரா



யிருந்தாலும் இவ்விஷயங்களில் டாணுக்காரன் சொல்லுவதுபோல் நடக்கவேண்டும். அவ்விதம் நடந்தால்தான் சாலைகளில் அபாயங்கள் உண்டா காமல் இருக்கும்.

கேள்விகள் :—நாம் எந்த அடையாளத்தால் ஒரு டாணுக்காரனைத் தெரிந்து கொள்ளலாம்? டாணுக்கார னிடம் இருக்கவேண்டிய சாமான்கள் எவை? அவற்றின் உபயோக மென்ன? எந்தெந்த இடங்களில் நீ டாணுக்கார னைப்பார்க்கிறாய்? அவனை ஏன் அவ்விடங்களில் வைத் திருக்கிறார்கள்?

கடின பதங்கள் :—நன்மை, வட்டம், பெரியதனக்காரர், கையொப்பம், களவு, மனு, நடவடிக்கை, ஆபத்து, அபாயம்.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# 9. சென்னைப் பொருட்காட்சிச் சாலை.

நமது இராஜதானியின் தலை நகரமாகிய சென்னப் பட்டினத்தில், குறிப்பிடத்தக்க காட்சிகள் பல இருக்கின்றன. அவற்றுள் பொருட்காட்சிச் சாலை ஒன்று. சென்னைக்குப் புதிதாகப் போகிறவர்கள் இதைத் தவறாமல் பார்த்து விட்டு வருவார்கள்.

துரைத்தனத்தார், நமது இராஜதானியில் கிடைக்கும் அருமையான பொருள்கள் பலவற்றையும், இன்னும் பல அற்புதமான சாமான்களையும், பொருட்காட்சிச் சாலையில் சேகரித்து வைத்திருக்கிறார்கள். மேலும், இப்பொருள்களைப் பல பகுதிகளாகப் பிரித்து ஒழுங்காய் வைத்திருக்கிறார்கள். இப்படி வைத்திருப்பதால், ஜனங்கள் அவற்றைப் பற்றிப் பல உண்மைகளைச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளுகிறார்கள்.

இக் காட்சிச்சாலையில், நம் முன்னோர்கள் பூர்வகாலத்தில் நடத்திவந்த வாழ்க்கையை விளக்கும் பொருள்கள் பலவற்றை ஒரு புறத்தில் காண

லாம். இன்னெரு புறத்தில் நமது இராஜதானி யில் அகப்படும் உலோகவகைகளின் மாதிரிகள் வைக்கப்பட்டுள்ளன. வேருெரு பக்கத்தில், நமது தேசத்தில் விளையும் தானிய மாதிரிகள் வரிசை வரிசையாய் வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்க லாம். மற்றும் ஓரிடத்தில், நம் ஜனங்களின் கைத் தொழில்களை விளக்கும், பல வேறு பொருள் களைக் காணலாம்.

இப்பொருள்களே அல்லாமல், பொருட்காட் சிச்சாலையில் சித்திரவேலை, சிற்பவேலை முதலிய வைகளை விளக்கும் பல அற்புதமான வஸ்துக் களும் இருக்கின்றன. அவை பார்ப்பதற்கு வெகு அழகாயும், ரம்மியமாயு மிருக்கும். மக்கள் அவ் வப்போது அடைந்திருந்த நாகரிகத்தை விளக்க, அவர்கள் உபயோகித்து வந்த உடைகள், கவசங் கள், ஆயுதங்கள் முதலியவற்றையும் இக்காட்சிச் சாலையில் அதிகாரிகள் கருத்தோடு சேமித்து வைத்துள்ளார்கள்.

பலவகைப் பிராணிகளைக் காட்டவும் இச்சாலை யில் ஏற்பாடு செய்திருக்கிருர்கள். இவ்விடத்தில், சிறு பூச்சி முதல் பெரிய திமிங்கிலம் வரையில் உள்ள பலவகைப் பிராணிகளையும் பார்க்கலாம். ஆனுல் அவை உயிரில்லாதவை. இதனுல் தான் ஜனங்கள் இச்சாலையைச் 'செத்த காலேஜ்' என் றும் சொல்லுவார்கள்.

இப் பொருட்காட்சிச்சாலைக்கு ஆங்கிலமொழி

யில் 'மியூஸியம்' என்று பெயர். ஜனங்களின் நன்மைக்காகவே துரைத்தனத்தார் இதை அதிக பணம் செலவுசெய்து காப்பாற்றி வருகிறார்கள். இச்சாலையின் உள்ளே சென்று அங்குள்ள பொருள்களைப் பார்த்தால், கடவுள் படைப்பின் பெருமை நமக்குத் தெரியவரும்.

கேள்விகள் : — பொருட்காட்சிச்சாலை வைப்பதின் நோக்கம் என்ன? ஆங்குள்ள பொருள்களைப்பற்றி ஜனங்கள் தெரிந்துகொள்ள அதிகாரிகள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? சென்னைப் பொருட்காட்சிச்சாலையைப் போன்ற சாலை வேறு எவ்விடங்களில் இருக்கின்றன?

கஃடின பதங்கள் :—காட்சி, பட்டினம், துரைத்தனம், பூர்வகாலம், உலோகம், சித்திரம், சிற்பம், ரம்மியம், நாகரிகம், கவசம், சேமித்து, படைப்பு.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 10. ரெயில் பிரயாணம்.

(ஒரு சம்பாஷணை)

தகப்பனார்.—சங்கரா! இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாயே! பொழுது விடிந்துவிட்டது. மணியும் ஆறரை ஆயிற்று. நாம் எட்டரை மணிக்குப் புறப்படும் ரெயில் வண்டியில் மானா

லாம். இன்னொரு புறத்தில் நமது இராஜதானியில் அகப்படும் உலோகவகைகளின் மாதிரிகள் வைக்கப்பட்டுள்ளன. வேறொரு பக்கத்தில், நமது தேசத்தில் விளையும் தானிய மாதிரிகள் வரிசை வரிசையாய் வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். மற்றும் ஓரிடத்தில், நம் ஜனங்களின் கைத்தொழில்களை விளக்கும், பல வேறு பொருள்களைக் காணலாம்.

இப்பொருள்களே அல்லாமல், பொருட்காட்சிச்சாலையில் சித்திரவேலை, சிற்பவேலை முதலியவைகளை விளக்கும் பல அற்புதமான வஸ்துக்களும் இருக்கின்றன. அவை பார்ப்பதற்கு வெகு அழகாயும், ரம்மியமாயுமிருக்கும். மக்கள் அவ்வப்போது அடைந்திருந்த நாகரிகத்தை விளக்க, அவர்கள் உபயோகித்து வந்த உடைகள், கவசங்கள், ஆயுதங்கள் முதலியவற்றையும் இக்காட்சிச்சாலையில் அதிகாரிகள் கருத்தோடு சேமித்து வைத்துள்ளார்கள்.

பலவகைப் பிராணிகளைக் காட்டவும் இச்சாலையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்விடத்தில், சிறு பூச்சி முதல் பெரிய திமிங்கிலம் வரையில் உள்ள பலவகைப் பிராணிகளையும் பார்க்கலாம். ஆனால் அவை உயிரில்லாதவை. இதனால் தான் ஜனங்கள் இச்சாலையைச் 'செத்த காலேஜ்' என்றும் சொல்லுவார்கள்.

இப் பொருட்காட்சிச்சாலைக்கு ஆங்கிலமொழி

யில் 'மியூஸியம்' என்று பெயர். ஜனங்களின் நன்மைக்காகவே துரைத்தனத்தார் இதை அதிக பணம் செலவுசெய்து காப்பாற்றி வருகிறார்கள். இச்சாலையின் உள்ளே சென்று அங்குள்ள பொருள்களைப் பார்த்தால், கடவுள் படைப்பின் பெருமை நமக்குத் தெரியவரும்.

கேள்விகள் : — பொருட்காட்சிச்சாலை வைப்பதின் நோக்கம் என்ன? ஆங்குள்ள பொருள்களைப்பற்றி ஜனங்கள் தெரிந்துகொள்ள அதிகாரிகள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? சென்னைப் பொருட்காட்சிச்சாலையைப் போன்ற சாலை வேறு எவ்விடங்களில் இருக்கின்றன?

கடின பதங்கள் :—காட்சி, பட்டினம், துரைத்தனம், பூர்வகாலம், உலோகம், சித்திரம், சிற்பம், ரம்மியம், நாகரிகம், கவசம், சேமித்து, படைப்பு.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 10. ரெயில் பிரயாணம்.

(ஒரு சம்பாஷணை)

தகப்பனார்.—சங்கரா! இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாயே! பொழுது விடிந்துவிட்டது. மணியும் ஆறரை ஆயிற்று. நாம் எட்டரை மணிக்குப் புறப்படும் ரெயில் வண்டியில் மானா



மதுரை போவதாக ஏற்பாடு செய்திருந்ததை மறந்து விட்டாயா?

சங்கரன். — அப்பா! நான் இரவெல்லாம் ரெயில் பிரயாணத்தைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததால், நெடுநேரம் தூக்கம் வரவில்லை. இதோ எழுந்துவிட்டேன். ஒரு நொடியில் பிரயாணத்திற்குத் தயாராக வருகிறேன்.

[சங்கரன் பல்விளக்கிக் காலைக்கடனை முடித்துக்கொண்டு பிரயாணத்துக்குத் தயாராஞன். உடனே அவனும் அவன் தகப்பனும் ஒரு குதிரைவண்டியில் ஏறிக்கொண்டு ரெயிலடிக்குச் சென்ருர்கள்.]

சங்கரன்.—அப்பா! இது என்ன கட்டடம்?

தகப்பனர்.—இதுதான் ரெயில்வே ஸ்டேஷன். இங்கேதான் நாம் வண்டி ஏறவேண்டும்.

சங்கரன்.—அப்பா! இந்த ஜன்னலண்டை ஏன் ஜனங்கள் கூட்டமாய் நிற்கிருர்கள்?

தகப்பனர்.—இதுதான் டிக்கெட்டு கொடுக்குமிடம். இங்கே பணம் கொடுத்து டிக்கெட்டு வாங்கிக்கொண்டுதான் வண்டியில் ஏறவேண்டும்.

சங்கரன்.—அப்பா! இப்பலகையில் மதுரை ஜங்ஷன் என்று எழுதியிருக்கிறதே, ஜங்ஷன் என்ருல் என்ன?

தகப்பனர்.—ஜங்ஷன் என்ருல் சந்திக்கும் இடம் என்று பொருள். திருநெல்வேலி, இராமேசுவரம், திருச்சிராப்பள்ளி, போடிநாயகனூர் முதலிய பல இடங்களிலிருந்தும் வரும் வண்டிகள் இங்கு சந்திக்கின்றன. அதனல்தான் இவ்விடத்திற்கு ஜங்ஷன் என்று பெயர்.

சங்கரன்.—இதென்ன, மூட்டைகளை நிறுக்கிறார்களே?

தகப்பனார்.—அங்கு மேலேயிருக்கும் பெயர்ப் பலகையைப் பார். அதில், லக்கேஜ் பார்சல் ஆபீஸ் என்று எழுதியிருக்கிறது. பிரயாணிகளின் சாமான்கள் அதிகமாயிருந்தால், அவைகளை இங்கே நிறுத்துப் பணம் கொடுக்கவேண்டும். வெளியூர்களுக்குச் சாமான்கள் அனுப்பவேண்டுமானாலும் இங்கேதான் நிறுக்கவேண்டும்.

சங்கரன்.—இந்த மூட்டைகளை என்ன செய்வார்கள்?

தகப்பனார்.—கூலியாட்கள் இவைகளைக் கை வண்டியில் தள்ளிக்கொண்டுபோய் ரெயில் வண்டியில் ஏற்றுவார்கள்.

சங்கரன்.—அப்பா! அதோ, தூரத்தில் மூட்டைகளை வேறுவிதமான வண்டிகளில் ஏற்றுகிறார்களே, அவைகள் எங்கே போகின்றன?

தகப்பனார்.— அவைகள் கூட்ஸ் வண்டிகள். மூட்டைகள் பெரியவையாயும், அதிகமாயு மிருந்தால் அவைகளைக் கூட்ஸ் வண்டிகளில் அனுப்புவார்கள். அப்படி அனுப்புவதற்குச் செலவு குறைவு. ஆனால், மூட்டைகள் கொஞ்சம் தாமதித்துப் போய்ச்சேரும்.

சங்கரன்.—அப்பா! அதோ, தூரத்திலிருந்து ஒரு வண்டி ஊதிக்கொண்டு வருகிறதே, அது எங்கே போகிறது?

தகப்பனுர். — அதுதான் மானுமதுரைக்குப் போகும் வண்டி. நாம் அதில் தான் ஏறிச் செல்ல வேண்டும்.

[அந்த வண்டி ரெயிலடி மேடையில் வந்து நின்றதும், சங்கரனும் அவன் தந்தையும் அதில் ஏறினுர்கள்.]

சங்கரன்.—அப்பா! ஏன் வண்டி இங்கேயே நிற்கிறது?

தகப்பனுர்.—வண்டி இங்கேயே நின்று விடாது. பிரயாணிகள் தங்கள் சாமான்களுடன் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் நேரம் பிடிக்கும் அல்லவா? அதற்காக இங்கு வண்டி கால்மணி நேரம் நிற்கும்.

சங்கரன்.—அப்பா! இதோ, பச்சைக் கொடியை ஆட்டுகிறவர் யார்?

தகப்பனுர்.—சங்கரா! இவர்தான் கார்டு. இவர் உத்தரவு கொடுத்தால்தான் வண்டி புறப்படும். முன்னே எஞ்சினில் நின்றுகொண்டிருக்கும் டிரைவருக்கு, வண்டியைச் செலுத்தலாம் என்று தெரிவிப்பதற்காகவே, இவர் கொடியை ஆட்டுகிருர்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், ரெயில் வண்டி நகரத் தொடங்கியது. கொஞ்ச நேரமானதும், வண்டி மானுமதுரை ஸ்டேஷனை அடைந்தது. தந்தையும் மைந்தனும் வண்டியை விட்டு இறங்கி, டிக்கெட்டைக் கொடுத்துவிட்டுத் தங்கள் வீட்டுக்குச் சென்றுர்கள்.

கேள்விகள் :—ரெயில் வண்டியை எது இழுக்கிறது? ரெயில் வண்டி எதன் மீது ஓடுகிறது? ரெயில் வண்டியில் எத்தனை வகுப்புகள் இருக்கின்றன? வெகு தூரம் பிரயாணம் செய்பவர்களுக்கு உணவும் நீரும் எங்கிருந்து கிடைக்கின்றன? ரெயில் வண்டிகளில் இரவில் வெளிச்சத்திற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்? கார்டு வண்டி எங்கே இருக்கிறது? அவர் வண்டியைப் புறப்படச் செய்ய இரவில் என்ன அடையாளம் செய்கிறார்?

கடின பதங்கள்:—நொடி, பிரயாணம், தயாராக, தாமதம், உத்தரவு, தந்தை, மைந்தன்.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# 11. பச்சையப்ப முதலியார்.

நமது நாட்டில் சிறந்த தருமங்கள் செய்து அழியாப் புகழ்பெற்றவர் பலர். அவர்களுள் பச்சையப்ப முதலியார் என்னும் பெரியார் ஒருவர். அவர், தாமே வருந்திப் பெரும் பொருள் தேடினார். அவ்வாறு தேடிய பணத்தை வீணில் செலவிட வில்லை. தேச முன்னேற்றத்திற்கான தருமத்திற்கு அப்பொருளை வைத்தார்.

நீ எப்போதாவது சென்னப்பட்டினம் சென்றால், அங்குள்ள பச்சையப்பன் கலாசாலையைப் பார். அது மிகவும் பிரசித்தியானது. அதை



யும் தவிர, காஞ்சீபுரம், சிதம்பரம் முதலிய இடங்களிலும் பச்சையப்பர் பேரால் உயர்தரப் பாடசாலைகள் நடந்து வருகின்றன. இக்கல்விச்சாலைகளில் நூற்றுக்கணக்கான மாணுக்கர்கள் கல்வி கற்று வருகிருர்கள். பல மாணவர்கள் சம்பளமில்லாமலே படித்து வருகிருர்கள். இத்தருமங்கள் என்றும் அழியாமல் நடப்பதற்கு, பச்சையப்பர் பணம் பெரிய மூலதனமாய் இருந்து வருகிறது.

இப்பெரியார் தம் சிறுவயதில் கிழக்கு இந்தியா கம்பெனியில் ஒரு சிறு உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். பின்பு தம் சாமர்த்தியத்தினு



லும், உண்மையினுலும் விரைவில் மேல்பதவிக்கு வந்து, நேர்மையான வழியில் பெரும் பொருள் சேர்த்தார். அதை அவர் தம் சுயநலத்துக்குச் செலவிடவில்லை. ஆனுல் அதைப் பல வேறு தருமங்களுக்கு மூலதனமாக வைத்தார். நம் நாட்டில் அவர் காலத்தில் கல்வி கற்றவர்கள் மிகச் சிலரே இருந்தார்கள். ஆகவே, பலரும் கல்வி கற்று நல்ல பயன் அடையவேண்டும் என்று, முதலியார் வைத்த மூலதனத்தைக்கொண்டு கலா சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இப்போது அவை மிகச் சிறப்புடன் விளங்குகின்றன.

மேலும், இராமேசுவரம் முதல் காசிவரையிலு முள்ள எல்லாப் பெரிய கோயில்களிலும் பச்சை

யப்ப முதலியார் பெயரால் இன்னும் பல கைங்கரியங்கள் நடைபெற்று வருகின்றன.

'தோன்றில் புகழுடன் தோன்றுக.'

கேள்விகள்:—நமது நாட்டில் எப்படிப்பட்ட தருமங்கள் மிகுதியாயிருந்து வருகின்றன? பச்சையப்பரின் தருமம் எவ்வகைப்பட்டது? பச்சையப்பரின் தருமங்கள் எங்கெங்கே விளங்கி வருகின்றன?

கடின பதங்கள்:—புகழ், வீணில், மூலதனம், பதவி, நேர்மையான, சுயநலம், கைங்கரியம்.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறுவாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 12. திருஞானசம்பந்தர் தேவாரம் பாடியது.

சைவ சமயாசாரியர் நால்வரில் திருஞானசம்பந்தர் ஒருவர். அவர் எங்கே அவதரித்தார், எப்படித் தேவாரம் பாடத்தொடங்கினர் என்னும் விஷயங்கள் உங்களுக்குத் தெரியவேண்டும்.

தஞ்சாவூர் ஜில்லாவில் சீகாழி என்னும் பெயர் பெற்ற சிவஸ்தலம் ஒன்று இருக்கிறது. அதில் தான் திருஞானசம்பந்தர் அவதரித்தார். அவர் தந்தை சிவபக்தி மிகுந்த ஒரு பிராமணர். அவர் காலத்தில், நம் தமிழ்நாட்டில், தெய்வம் ஒன்

றில்லை என்னும் கொள்கை பரவியிருந்தது. இதை ஒழித்து, கடவுள் உண்டு என்னும் நம்பிக்கையைப் பரவச்செய்யும் வல்லமையுடைய ஒரு மைந்தன் வேண்டுமென்று அந்தப் பிராமணரும் அவர் மனைவியாரும் பரமசிவனைப் பலகாலும் வேண்டி வந்தார்கள். அதன் பயனாகத் திருஞான சம்பந்தர் தோன்றினர்.

தவத்தால் பிறந்த அக்குழந்தைக்கு மூன்றுவது வயது நடந்து கொண்டிருந்தது. அப்போது ஒருநாள் தந்தையார் வழக்கம்போல் நீராடச் சீகாழிக் கோயிலைச் சார்ந்த திருக்குளத்திற்குப் புறப்பட்டார். அச்சமயம் அவர் பிள்ளை, தானும் உடன் செல்லப் பிரியப்பட்டு அழுதது. தந்தையாரும் பிள்ளையை அழைத்துப்போய்க் குளக்கரை மேல் உட்காரவைத்துவிட்டு, தாம் நீராடக் குளத்தில் இறங்கினர். கரைமேலிருந்த பிள்ளை பசியால் "அம்மே! அப்பா!" என்று வாய் விட்டு அழுதது.

அப்பொழுது, எல்லா உயிர்கட்கும் தாயும் தந்தையுமாய் விளங்கும் பார்வதி தேவியும் பரமசிவனும், அக்குழந்தை முன் ரிஷபவாகனத்தின் மீது தோன்றினர்கள். அழுதுகொண்டிருந்த பிள்ளைக்குப் பார்வதி தேவியார் பொற் கிண்ணத்தில் பாலைக்கறந்து ஊட்டினர். உடனே அப் பிள்ளைக்குச் சகல ஞானமும் உண்டாய் விட்டது. அதனல் அவருக்கு ஞானசம்பந்தர் என்ற பெய

ரும் வந்தது. பின்பு பரமசிவனும், பார்வதி தேவியும் மறைந்தார்கள்.



இதற்குள் தந்தையும் அனுட்டானத்தை முடித்துக் கொண்டு குழந்தையண்டை வந்தார். அவர் குழந்தை பால் உண்டு ஆனந்தத்தோடு இருப்பதைக்கண்டு, "உனக்குப் பாலூட்டியது யார்?" என்று கோபத்தோடு கேட்டார். சம்பந்தர், ஆகாயத்தில் தமக்குமட்டும் தரிசனம் தந்து நிற்கும் பரமசிவனைச் சுட்டிக் காட்டிக்கொண்டே,

அழகான ஒரு பதிகத்தைப் பண்ணோடு பாடினார். இதனைக் கேட்ட தந்தையாரும் அங்கிருந்த மற்றும் பலரும் ஆச்சரிய மடைந்தார்கள்.

இவ்விதம் திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட அற்புதக் காட்சியை நினைப்பூட்ட, சீகாழியில் வருஷந்தோறும் சித்திரைமாதத்தில் சிறந்த திருவிழா ஒன்று நடை பெறுகிறது.

கேள்விகள்:—சைவ சமயாசாரியர் நால்வர் யாவர்? அவர்கள் பாடிய பாட்டுகளுக்குப் பேர் என்ன? நாத்திகக் கொள்கை, ஆத்திகக் கொள்கை இரண்டிற்குமுள்ள வித்தியாச மென்ன? ஞானசம்பந்தர் தவப்புதல்வர் என்பது எதனால் விளங்குகிறது? அவருக்கு அப்பெயர் எப்படி வந்தது? ஆத்திகக் கொள்கையைத் திருஞானசம்பந்தர் எப்படி நிலை நிறுத்தினார்?

கடின பதங்கள்:— சமயாசாரியர், அவதரித்தார், நீராட, ஞானம், அனுட்டானம், ஆனந்தம், தரிசனம், பதிகம், பண், அற்புதக்காட்சி, நினைப்பூட்ட, திருவிழா.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 13. நமது உடை.

நமது நாட்டில் வெப்பம் அதிகம். வெப்பம் மிகுந்த நாட்டு மக்களுக்குப் பருத்தி உடையே சிறந்தது. குளிர் மிகுந்த இடங்களிலுள்ள ஜனங்களுக்குக் கம்பளி உடைகள் ஏற்றவை. அதனால்

தான் வெப்பம் மிகுந்துள்ள நாட்டில் வசிக்கும் நாம் பருத்தி நூலாடையையே விசேஷமாக அணிகிறோம்.

நாம் அணியும் ஆடை எப்படித் தயாரிக்கப் படுகிறது தெரியுமா? அது பருத்தி நூலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. பருத்தி திருநெல்வேலி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களில் ஏராளமாய்ப் பயிராகிறது. முதலில் பருத்தியோடு சேர்ந்துள்ள விதையை நீக்கிவிட வேண்டும். பிறகு பருத்தியைச் சுத்தம்செய்து நூலாக நூற்று, அந்நூலைக்கொண்டு துணி நெய்ய வேண்டும்.

கிராமங்களில் பலர் இராட்டினத்தினுல் நூல் நூற்கிருர்கள். இவ்வழக்கம் நம் நாட்டில் வெகு காலமாய் இருந்துவருகிறது. இராட்டினத்தினுல் நூலை மெல்லியதாய் நூற்கவும், அதிகமாய் நூற்கவும் முடியாது. ஆகையால் இயந்திரங்களைக் கொண்டு நூல் நூற்பது இப்போது வழக்கமாய் விட்டது.

மதுரை, கோயம்புத்தூர், கோவில்பட்டி, தூத்துக்குடி, பாபநாசம், திருப்பூர், புதுச்சேரி, சென்னை முதலிய இடங்களில் பல பெரிய இயந்திரசாலைகள் இருக்கின்றன. இவைகளில் பலவற்றை இந்தியர்களே நடத்தி வருகிருர்கள்.

இப்படி நூற்ற நூல்களைக்கொண்டு ஜனங்கள் வஸ்திரங்கள் நெய்கிருர்கள். நம் நாட்டில் ஆடை

நெய்வதற்குக் கைத்தறிகளையே இன்னும் பெரும் பான்மையாய் உபயோகித்து வருகிறார்கள். பம் பாயில் இயந்திரங்களின் உதவியால் ஆடைகள் நெய்யப்படுகின்றன. இயந்திரங்களால் நெய்யப் படும் வஸ்திரங்கள் பம்பாயிலிருந்தும், பிற நாடு களிலிருந்தும் நமது மாகாணத்திற்கு வருகின் றன.

கேள்விகள் :—நமது இராஜதானியில் குளிர்மிகுந்த பிரதேசம் எது? பருத்தி எப்படிப்பட்ட நிலத்தில் அதிக மாய்ப் பயிராகும்? பருத்தியிலிருந்து கொட்டையை எவ் வாறு நீக்குகிறார்கள்? நம் நாட்டில் விளையும் பருத்தி முழுதும் இங்கேயே நூலாக நூற்கப்படுகிறதா? துணி நெய்பவர்களுக்கு என்ன பெயர்? நம் நாட்டிற்கு எத்தேசத் திலிருந்து பருத்தித்துணிகள் விசேஷமாய் வருகின்றன?

கடின பதங்கள் :—வெப்பம், ஆடை, அணிகிறோம், ஏராளமாய், வஸ்திரம்.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 14. தீபாவளி.

நம் நாட்டில் இந்துக்கள் கொண்டாடும் முக் கியமான பண்டிகைகளுள் தீபாவளிப் பண்டிகை ஒன்று. இதை ஏன் அவர்கள் கொண்டாடுகிறார் கள்? எப்படிக் கொண்டாடுகிறார்கள்? என்பதைப் பற்றி இங்கு நாம் அறிவோம்.



ஸ்ரீ கிருஷ்ணபகவான் துவாரகையில் செங்கோல் செலுத்தி வந்த காலத்தில், நரகாசுரன் என்னும் ஓர் அசுரன் பிராக்சோதிஷம் என்னும் பட்டணத்தில் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவன் வெகு கொடியவன்; சாதுக்களை மிகவும் வருத்தி வந்தான். அந்த சாது ஜனங்கள் அவன் செய்த தொந்தரவு பொறுக்க முடியாமல், ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் முறையிட்டுக் கொண்டார்கள். அவர் அக்கொடியோனுடன் போர் செய்து அவனைக் கொன்ருர். அவன் இறக்கும் தருணத்தில், தான் இறந்த நாளை ஜனங்கள் யாவரும் ஒரு பண்டிகையாகக் கொண்டாட வேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ணனைக் கேட்டுக் கொண்டான். அவரும் அவ்வாறே அனுக்கிரகம் செய்தார். அந்தத் தினமே தீபாவளியாகும். அதனுல்தான் இந்துக்கள் யாவரும் இன்றும் அந்த நாளை ஒரு பண்டிகையாகக் கொண்டாடி வருகிருர்கள்.

அந்த நாளில் இந்துக்கள் அதிகாலையில் எழுந்திருந்து, எண்ணெய் தேய்த்துக் கொண்டு நீராடி, புதிய உடை தரித்துக் கொள்ளுவார்கள். சந்தனம், புஷ்பம் முதலியன அணிந்துகொண்டு பந்துக்களையும் சிநேகிதர்களையும் காணச் செல்லுவார்கள். உறவினர் பலருடன் கூடி உண்டு மகிழ்வார்கள். சிறு பிள்ளைகள் பட்டாசு, மத்தாப்பு முதலியன சுடுவார்கள்.

சில வியாபாரிகள் தீபாவளியை ஒரு சுபதின

மாகக் கொண்டு புதுக்கணக்கு ஏற்படுத்துவதோடு, புது வியாபாரமும் செய்யத் துவக்குவார்கள். வடதேசத்தில் ஜனங்கள் அன்றிரவு தங்கள் வீடுகளில் தீபங்களை வரிசை வரிசையாய் ஏற்றி வைத்து அலங்கரிப்பார்கள். இதனாலேயே இப் பண்டிகைக்கு தீபாவளி என்னும் பெயர் ஏற்பட்டது. 'தீபம்' என்பது விளக்கு என்றும், 'ஆவளி' என்பது வரிசை என்றும் பொருள் தரும்.

கேள்விகள் :—தீபாவளி என்ற பதத்திற்குப் பொருள் என்ன? அப்பண்டிகைக்கு ஏன் அப்பெயர் வந்தது? உங்கள் ஊரில் ஜனங்கள் இப்பண்டிகையை எவ்வாறு கொண்டாடுகிறார்கள்?

கடின பதங்கள் :—கொண்டாடு, பண்டிகை, அசுரன், அரசாட்சி, கொடியவன், சாதுக்கள், முறையிடு, தருணம், அனுக்கிரகம், அலங்கரி.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 15. வாசனைப் பொருள்கள்.

மிளகு, ஏலம், லவங்கம் முதலியவை வாசனைத் திரவியங்களாகும். இவற்றுடன் பெருங்காயத்தையும் சேர்த்து எண்ணுவது தவறாகாது. இவைகள் நமக்கு எப்படிக் கிடைக்கின்றன தெரியுமா?



மிளகு ஒருவகைக் கொடியில் விளைகிறது. இக்கொடிகள் மலையாளத்தில் விசேஷம். இவை பெரிய மரங்களைச் சுற்றிப் படரும். மலையாளத்தில் வீடுதோறும் உள்ள தோட்டத்து மரங்களில் இக் கொடிகளைக் காணலாம். மிளகுக் கொடியின் இலை வெற்றிலையைப்போலிருக்கும்.





ஏலமும், லவங்கம் அல்லது கிராம்பும் செடி களிலிருந்து கிடைக்கின்றன. நம் தமிழ்நாட்டி லுள்ள போடிநாயகனூரை அடுத்த மலைச்சரிவு களில் ஏலக்காய்ச்செடி மிகுதியாய்ப் பயிராகிறது.

லவங்கமோ, மேற்கு மலைத்தொடரில் பயிராகும் ஒருவகைச் செடியிலிருந்து கிடைக்கிறது.

ஏலத்தையும் லவங்கத்தையும் செடிகளிலிருந்து பறித்துக் காயவைத்து, வெளியிடங்களுக்கு அனுப்புகிறார்கள். மேல்நாட்டார் இவைகளிலிருந்து திராவகம் இறக்கி, மருந்தாக உபயோகிக்கிறார்கள். நம் தேசத்திலும், இவைகள் அநேக சிறந்த அவுடதங்கள் செய்யப் பயன்படுகின்றன.

பெருங்காயம் ஒருவகை மரத்தின் பாலைக் கொண்டு செய்யப்படுகிறது. அவ்வித மரங்கள் நம் தமிழ்நாட்டில் அகப்படுவதில்லை. அவை இமயமலையில் மிகுதி. அம்மரங்களைச்சுற்றி வெட்டுக்கள் வெட்டி, அவற்றிலிருந்து வடியும் பாலை உலர்த்தினால், பெருங்காயம் கிடைக்கும். இது காரமாய் இருக்கும். ஆதலால் பலர் இதைச் சேர்ப்பதில்லை. ஆனால் தென்னாட்டார் இதனை அதிகமாய் உபயோகிக்கிறார்கள். பெருங்காயத்தில் இரண்டுவித முண்டு: ஒன்று பால் பெருங்காயம், மற்றொன்று மெழுகு பெருங்காயம். இவற்றில் மெழுகு பெருங்காயத்தையே பலர் சேர்த்துக் கொள்ளுகிறார்கள்.

மேலே சொன்ன வாசனைப் பொருள்களை நம் தேசத்தவர் நீண்டகாலமாய் உபயோகித்து வருகிறார்கள். இவை நமக்கு விசேஷ நன்மையைத் தருகின்றன.

கேள்விகள்:—வாசனைத்திரவியங்கள் யாவை? மிள கை நாம் எப்படி உபயோகிக்கிறோம்? லவங்கமும், ஏலமும் நமக்கு எவ்வாறு உபயோகமாகின்றன? பெருங்காயத்தை நாம் எப்படி உபயோகிக்கிறோம்? இச்சாமான்கள் எந்தக் கடைகளில் கிடைக்கும்?

கடின பதங்கள் :—மலைச்சரிவு, மேல்நாடு, திராவகம், அவுடதம், காரம், நன்மை.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 16. பொள்ளாச்சிச் சந்தை.

மணி.— அப்பா! இன்று வியாழக்கிழமை. இன்று பொள்ளாச்சியில் சந்தை கூடுமே. என்னைச் சந்தைக்குக் கூட்டிக் கொண்டு போவதாக வெகு நாளாகச் சொல்லி வருகிறீர்கள். இன்றைக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள்.

தந்தை.—மணி! அப்படியே ஆகட்டும். போவோம் வா.

[தந்தையும் மகனும் தங்கள் கிராமத்திலிருந்து புறப்பட்டுச் சந்தைக்கு வந்து சேர்ந்தார்கள்.]

மணி.—அப்பா! இங்கே வண்டிகள் பல நிற்கின்றனவே, ஏன்?

தந்தை.—சந்தைக்குச் சரக்குகளைக் கொண்டு வந்த வண்டிகளும், சந்தையில் வாங்கும் சரக்கு



களை ஏற்றிப்போவதற்கு வந்திருக்கும் வண்டி களும் இங்கே நிற்கின்றன. இதுதான் வண்டிப்

பேட்டை. எல்லா வண்டிகளும் இங்கேதான் நிற்கவேண்டும்.

மணி.—அப்பா! இங்கு ஜனங்கள் திரள் திரளாக இருக்கிறார்களே, இவர்கள் எல்லோரும் இவ்வூர் ஜனங்களா?

தந்தை.—இவர்கள் இவ்வூர் ஜனங்கள் மாத்திரமல்ல. சுற்றுப்புறத்திலுள்ள ஊர்களிலிருந்தும் ஜனங்கள் பலர் வந்திருப்பார்கள். சந்தை, ஒருவாரத்திற்கு ஒருமுறைதான் கூடும். அன்று ஜனங்கள் தங்களுக்கு ஒரு வாரத்திற்கு வேண்டிய சாமான்களை வாங்கிச் செல்லுவார்கள்.

மணி.—அப்பா! இந்தவரிசை முழுதும் தேங்காய்க் கடைகளாகவே இருக்கின்றனவே, இத்தனை தேங்காய்களையுமா இந்த ஜனங்கள் வாங்கி வீட்டுக்குக் கொண்டுபோகிறார்கள்?

தந்தை.—மணி! இந்தத் தேங்காய்களில் சிலவற்றைத்தான் இவர்கள் தங்கள் உபயோகத்திற்கு வாங்குவார்கள். பெரும் பகுதியை வியாபாரிகள் வாங்கிப் பெரிய பட்டணங்களுக்கு அனுப்புவார்கள்.

மணி.—இதோ, இந்தப்பக்கத்தில் புளி, மிளகாய், பருப்பு முதலிய பல சாமான்கள் இருக்கின்றனவே, இவை என்ன கடைகள்?

தந்தை.—பலசரக்குகள் இருப்பதால் இவற்றிற்குப் பலசரக்குக் கடைகள் என்று பெயர்.

மணி.—இங்கே பாருங்கள்! நிலக்கடலை குவி

யல் குவியலாய்க் கொட்டியிருக்கிறதே, இவ்வளவு கடலையையுமா ஜனங்கள் தின்பதற்கு வாங்குகிறார்கள்.

தந்தை.—ஜனங்கள் புசிப்பதற்கு ஒரு சிறு பாகமே வாங்குவார்கள். பெரும்பாகத்தை வியாபாரிகள் வாங்கி அயல் நாடுகளுக்கு அனுப்புவார்கள்.

மணி.—அயல் நாட்டார்கள் வாங்கி நிலக் கடலையை என்ன செய்கிறார்கள்?

தந்தை.—நிலக்கடலையைக் கொண்டு அவர்கள் சவர்க்காரம், மெழுகுவர்த்தி முதலிய பொருள்கள் செய்து பிற தேசங்களுக்கு ஏற்றுமதி செய்வார்கள்.

மணி.—இந்தப் பக்கத்தில் அநேக மூட்டைகள் அடுக்காய் உள்ளனவே. இவை பருத்தி மூட்டைகள் போல் தோன்றுகின்றனவே. இவை ஏன் சந்தைக்கு வந்திருக்கின்றன?

தந்தை.—நமது ஜில்லாவில் பருத்தி விசேஷமாய்ப் பயிராகிறது. கொட்டை நீக்கின பருத்தியை இவைபோன்ற சிப்பங்களாகக்கட்டி விலைக்குக் கொண்டு வருவது வழக்கம். பருத்தி வியாபாரிகள் இவற்றை வாங்கி வெளியூர்களுக்கும், அயல் தேசங்களுக்கும் அனுப்புவார்கள்.

மணி.—அங்கே பருத்தியை என்ன செய்வார்கள்?

தந்தை.—பெரிய இயந்திரசாலைகளில் பருத்தி

யிலிருந்து நூல் நூற்று, வஸ்திரங்கள் நெய்து பல ஊர்களுக்கும் அனுப்புவார்கள்.

மணி.—இந்தப்பக்கத்தில் கறிகாய்களும், பழங்களும் ஏராளமாய் இருக்கின்றன. இவை யெல்லாம் இங்குள்ள ஜனங்கள் உண்பதற்காகவே வந்திருக்கின்றன என்று எண்ணுகிறேன்.

தந்தை.—ஆம்; நீ சொல்வது சரியே. இவைகளை இங்குள்ள ஜனங்கள் ஒரு வாரத்திற்கு வேண்டிய அளவு வாங்கிக் கொள்ளுவார்கள்.

மணி.—அப்பா! இதென்ன? மாடுகள் கூட்டம் கூட்டமாக நிற்கின்றனவே, இவை கூடவா விலைக்கு வந்திருக்கின்றன?

தந்தை.—ஆம், அப்படித்தான். பல ஊர்களிலிருந்தும் ஜனங்கள் மாடுகளைச் சந்தைக்குக் கொண்டு வருவார்கள். மாடு வேண்டியவர்கள் இங்குத்தான் வந்து வாங்குவார்கள்.

[சந்தை முழுவதும் பார்த்தான பிறகு, தந்தையும் மகனும் வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு ஊருக்குத் திரும்பினார்கள்.]

கேள்விகள்:—உங்களூருக்கருகில் எங்கே சந்தைகூடுகிறது? அங்கு என்னென்ன சாமான்கள் வியாபாரத்திற்கு வருகின்றன? சந்தை கூடுவதற்கு யார் இடம் கட்டியிருக்கிறார்கள்? அங்கு வரும் வியாபாரிகளிடம் ஏன் வரிவசூலிக்கப்படுகின்றது. உங்களூர் சந்தையிலிருந்து அயல் ஊர்களுக்குப் போகும் சாமான்கள் யாவை?

கடின பதங்கள்:—சரக்கு, பேட்டை, திரள், பகுதி, ஏற்றுமதி, சிப்பம், இயந்திரசாலை.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# 17. திருக்கழுக்குன்றம்.

பிள்ளைகளே, நீங்கள் திருக்கழுக்குன்றம் போயிருக்கிறீர்களா? திருக்கழுக்குன்றம் செங்கற்பட்டுக்கு அருகாமையிலுள்ள ஒரு சிவஸ்தலம். இங்கு, சிவபெருமான் ஒரு குன்றின்மீது கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறார். ஒருநாள், முப்பது மாணாக்கர்கள் தங்கள் உபாத்தியாயருடன் சென்னையிலிருந்து வந்து இத்தலத்தைப் பார்த்து விட்டுத் திரும்பினார்கள். அந்த விவரத்தைக் கேளுங்கள்.

உபாத்தியாயர் கட்டளைப்படி, அவருடைய முப்பது மாணாக்கர்களும் தங்கள் பெற்றோர்களிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, காலை ஆறு மணிக்கு எழும்பூர் ஸ்டேஷனண்டை வந்தார்கள். உபாத்தியாயரும் அங்கு வந்து சேர்ந்தார். எழும்பூரைவிட்டுப் புறப்பட்டுச் செங்கற்பட்டு செல்லும் ஆறரை மணி வண்டியில் எல்லோரும் ஏறி, எட்டு மணிக்குச் செங்கற்பட்டு போய்ச் சேர்ந்தார்கள். அங்கு, திருக்கழுக்குன்றம் செல்லும் மோட்டார் பஸ்கள் நின்றுகொண்டிருந்தன. அவைகளில் அவர்கள் ஏறிக்கொண்டு திருக்கழுக்



குன்றத்துக்குச் சுமார் ஒன்பது மணிக்குச் சென் றூர்கள்.

வண்டியைவிட்டு இறங்கியதும், அவர்கள் உபாத்தியாயர் சொற்படி ஒரு சத்திர அறையில்

TB
031-(3)
N33



தங்கள் சாமான்களை வைத்துவிட்டுக் கோயில் எதிரேயுள்ள தடாகத்தில் இறங்கி நீராடினார்கள். அக்குளத்துக்குச் சங்குதீர்த்தம் என்று பெயர். அதன் ஜலம் தேக ஆரோக்கியத்தைத் தரக்கூடியது என்று பெயர்பெற்றது. நீராடிய பின்பு அவர்கள் தேங்காய், பழம் முதலியன வாங்கிக் கொண்டு, பத்து மணிக்கு மலைமீது ஏறினார்கள். அப்போது மலைக்கோயிலில் தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. கழுக்குன்றத்து உச்சியில் உள்ள கடவுளாகிய வேதகிரீசுவரரை அவர்கள் முறைப் படி தரிசித்துவிட்டு வெளியே வந்தார்கள்.

திரும்பி வரும் வழியில் ஓரிடத்தில் பலர் கூட்டமாய் நின்று கொண்டிருந்தார்கள். சற்று தூரத்தில் ஒரு பண்டாரம் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் தம் கையில் சர்க்கரைப் பொங்கலை வைத்துக் கொண்டு ஆகாயத்தை நோக்கிய வண்ணமாய் இருந்தார். மணி பன்னிரண்டு அடித்ததும், எங்கிருந்தோ இரண்டு கழுகுகள் பறந்து வந்து, அவர் கையில் இருந்த பொங்கலை உண்டன. பின்பு அவைகள் அங்கு ஒரு கிண்ணத்திலிருந்த நீரைப் பருகிவிட்டுப் பறந்து போயின. இவ்விதம் ஒவ்வொரு நாளும் உச்சிவேளையில் இவ்விரண்டு பக்ஷிகளும் பல வருஷங்களாக வந்து கொண்டு இருக்கின்றன. கழுகுகள் வந்து பூசிப்பதனாலேயே இத்தலத்துக்குத் திருக்கழுக்குன்றம் என்னும் பெயர் வந்தது என்று சொல்லுவார்கள்.

இந்த அதிசயத்தை அந்த மாணாக்கர்களும் கண்டு களித்துக் கீழே இறங்கினார்கள். அப்பால் தம் விடுதிக்குப் போய் உண்டு இளைப்பாறினார்கள். மாலை நான்கு மணி சுமாருக்கு, அவர்கள் யாவரும் மலையைச் சுற்றிவரப் புறப்பட்டார்கள்.

மலையைச் சுற்றிலும் நல்ல பாதை உண்டு. நூற்றுக்கணக்கான ஜனங்கள் அம்மலையைத் தினந்தோறும் சுற்றிவருகிறார்கள். உடம்பிற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடிய சிறந்த மூலிகைகள் அதில் இருக்கின்றன. அதைச் சுற்றி வரும்போது மூலிகைகளின் காற்று நம்மீது படுவதால், பல நோய்கள் நீங்குகின்றன. இதைக் கருதியே, தீராத நோயாளிகளும் திருக்கழுக்குன்றத்தில் மாதக்கணக்காய்த் தங்கி, கிரிவலம் வருகிறார்கள்.

மாணாக்கர்களும் வெகு சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு ஆசிரியரைத் தொடர்ந்து அம்மலையைச் சுற்றி வந்தார்கள். அச்சமயம் பக்தர்கள் சிலர் உருக்கமான பாடல்கள் பாடிக்கொண்டு போவது தெரிந்தது. அப்போது சிறுவர்களுக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு ஓர் அளவில்லை. இவ்வாறு மற்றொரு முறை வலம்வர வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

பின்பு அவர்கள் திருக்குளத்தில் மாலை அநுட்டானத்தை முடித்துக்கொண்டு, கீழேயிருக்கும் ஆலயம் சென்று, ஈசனையும் அம்பாளையும்

தரிசித்தார்கள். அதன் பிறகு அவர்கள் விடுதி சென்று, உண்டு நித்திரை செய்தார்கள்.

பொழுது விடிந்ததும், மாணாக்கர்கள் யாவரும் தாங்கள் முன்னே தீர்மானித்துக் கொண்டபடி, மறுபடியும் மலையை வலம்வரப் புறப்பட்டார்கள். காலை நேரமானதால் வெய்யிலின் கொடுமை சிறிதும் இல்லை. இளம் காற்றும் அடித்துக் கொண்டிருந்தது. அவர்கள் மனதும் சுத்தமாயிருந்தது. இப்படி கிரிவலம் முடிந்தபிறகு விடுதிக்குத் திரும்பினார்கள். பின்பு அவரவர் தம் தம் சாமான்களை எடுத்துக் கொண்டு, மோட்டார் வண்டியேறி, செங்கற்பட்டு சேர்ந்தார்கள். அங்கே ரெயிலேறி ஊருக்குத் திரும்பி, சாப்பாட்டு வேளைக்குத் தம் தம் வீட்டை அடைந்தார்கள்.

உடலுக்கும் உள்ளத்துக்கும் உற்சாகந்தரும் கழுக்குன்றத்தை அனைவரும் ஒரு முறையாவது தரிசிக்க வேண்டும் அல்லவா?

கேள்விகள்:—திருக்கழுக்குன்றம் என்ற பெயர் அவ்வூருக்கு எப்படி வந்தது? பக்ஷிகள் ஏன் தினந்தோறும் அதே வேளைக்கு உண்ண வருகின்றன? இவற்றைப்பற்றியுள்ள கதையைக் கேட்டிருக்கிறீர்களா? அவ்வூர்க்குளத்திற்குச் சங்குதீர்த்த மென்று ஏன் பெயர் வந்தது? இவ்வூரில் ஏன் பல சத்திரங்கள் கட்டியிருக்கிறார்கள்? நோயாளிகள் இவ்வூருக்குச் செல்வதின் நோக்க மென்ன?

கடின பதங்கள்:—அருகாமை, குன்று, அனுமதி, தடாகம், ஆரோக்கியம், பருகி, அதிசயம், களித்து, விடுதி, பாதை, மூலிகை, கருதி, கிரிவலம், அநுட்டானம், உள்ளம்.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 18. கிராமப் பஞ்சாயத்து.

கிராமப் பஞ்சாயத்து என்றால் என்ன தெரியுமா? முற்காலத்தில் ஒரு கிராமத்திலுள்ளவர் யாவரும் ஒன்று சேர்ந்து, அவர்களுள் பெரியோர்களாகிய ஐந்து பேரைத் தேர்ந்தெடுப்பார்கள். அந்த ஐவரும் கிராம விஷயங்களைக் கவனிப்பார்கள். யாராவது குற்றம் செய்தால், அதை விசாரித்து நியாயப்படி குற்றவாளிக்குத் தண்டனை விதிப்பார்கள். பொதுவாய்க் கிராமவாசிகள் யாவரும் பஞ்சாயத்தார் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள். ஏனென்றால், பஞ்சாயத்தார்கள் நீதி தவறி நடக்கமாட்டார்கள். அப்படித்தவறினால், கிராமவாசிகள் யாவரும் ஒன்று சேர்ந்து புதுப் பஞ்சாயத்தார்களை ஏற்படுத்திக் கொள்ளுவார்கள்.

பஞ்சாயத்தார் உத்தரவை மீறி நடந்த கிராமத்தார்கள் வீட்டிற்கு அம்பட்டன், வண்ணான் முதலிய தொழிலாளிகள் வேலைசெய்யப் போகமாட்டார்கள். ஆகையால் கிராமத்திலுள்ளோர் யாவரும் கட்டுக்கு அடங்கி இருப்பார்கள். ஊரில் நடக்கும் திருவிழா முதலிய கொண்டாட்டங்களுக்கு இப்பஞ்சாயத்தார்களே தலைமையாக நின்று, கிராம



வாசிகளிடமிருந்து சந்தா முதலியன வசூல் செய்து, அவற்றைச் சிறப்பாக நடத்துவார்கள். ஊரை அடுத்துள்ள காடு, புல் நிலம் முதலிய இடங்களில் ஆடு மாடு மேய்ப்பவர்களிட மிருந்து வரி வசூல் செய்து, அப்பணத்தைக்கொண்டு ஏரி மராமத்து முதலிய கிராம நன்மைக்கு வேண்டிய சீர் திருத்தங்களைச் செய்வார்கள். நிலங்களுக்கு முறையாக நீர்பாய்ச்சவும் ஏற்பாடு செய்வார்கள். கொலை முதலிய பெருங்குற்றங்கள் நடந்தால், இவர்கள் துரைத்தனத்தாருக்குத் தெரியப்படுத்திக் குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதற்குத் தகுந்த உதவியும் புரிவார்கள்.

இவ்விதமான பஞ்சாயத்து முன் காலத்தில் ஒவ்வொரு ஊரிலும் இருந்து வந்தது. இடையில் கொஞ்ச காலமாக அது மறைந்திருந்தது. இப்பொழுது நமது அரசாங்கத்தார் மறுபடியும் அதை வழக்கத்துக்குக் கொண்டுவர முயன்று வருகிறார்கள். பல விடங்களில் இப்பொழுது பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

பஞ்சாயத்தார்கள் எவ்வளவுக்கு எவ்வளவு ஒழுங்காக நடவடிக்கைகளை நடத்திவருகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு மேலான அதிகாரங்களை அரசாங்கத்தார் அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். பஞ்சாயத்து ஏற்பட்டிருப்பதனால் மிகுந்த பணச் செலவில்லாமல் பலவழக்குகள் உள்ளூரிலேயே தீர்க்கப்படுகின்றன.

கேள்விகள்:—கிராமப்பஞ்சாயத்து சரிவரவேலை செய்வதற்கு ஜனங்களிடம் எப்படிப்பட்ட குணங்கள் இருக்க வேண்டும்? கிராமப்பஞ்சாயத்து சுலபமாய்க் கவனிக்கக் கூடிய விஷயங்கள் எவை? கிராமப்பஞ்சாயத்தால் ஜனங்களுக்கு உண்டாகும் நன்மைகள் எவை?

கடின பதங்கள்:—தேர்ந்தெடு, தண்டனை, விதிப்பார்கள், நீதி, கட்டு, சந்தா, மராமத்து, இடையில், அதிகாரம்.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# 19. திருச்சி மலைக்கோட்டை.

அடுத்த பக்கத்திலுள்ள படத்தைப்பார். அதுதான் திரிச்சிராப்பள்ளி என்னும் பட்டணத்தின் நடுவே விளங்கும் குன்று. இதன் உச்சியில் வெகு அழகாய் ஒரு கோயில் அமைந்திருக்கிறதல்லவா? இது பிள்ளையார் கோயில். இதுபற்றியே இம் மலையை உச்சிப்பிள்ளையார் மலை என்றும் பலர் சாதாரணமாய்க் கூறுவார்கள்.

உச்சியிலுள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சற்றுக் கீழேயிருப்பது தாயுமானசுவாமி கோயில். இக்கோயிலின் ஸ்தூபிக்குத் தங்கத்தகடு போட்டிருப்பதால், அது பகலில் தகதகவென்று பிரகாசிக்கும்.

மலைக்கோட்டைக் கோயிலில் எழுந்தருளி



யுள்ள சுவாமிக்குத் தாயுமானசுவாமி என்ற பெயர் வந்ததற்கு ஒரு கதை உண்டு: ஒருகாலத்தில் ஒரு செட்டிப்பெண் தன் கணவனேடு திரிச்சிராப்பள்ளியில் வாழ்ந்துவந்தாள். அவள் இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் கடவுளைத் தினந்தோறும் பக்தியுடன் வழிபட்டுவரும் வழக்கம் உடையவள். அவளுடைய தாய் தந்தையர்கள் காவிரியாற்றின் வடக்கே வெகு தூரத்திலுள்ள ஓர் ஊரில் வசித்து வந்தார்கள். இப்படியிருக்கையில், அந்தச் செட்டிப் பெண்ணுக்குப் பிரசவ காலம் நெருங்கியது. அவளுக்கு உதவிபுரிய அவளுடைய தாய் திரிச்சிராப்பள்ளியை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவள் காவிரியாற்றை

அடைந்தபோது வெள்ளம் திடீரென்று பெருகி விட்டது. அதனால் அவள் ஆற்றைக் கடந்து வர முடியாமற் போயிற்று. உதவியில்லாமல் தவித்துக்கொண்டிருந்த அவள் மகள், ஈசனை நினைந்து முறையிட்டாள். சிவபெருமான் அவளது தாய் போல் உருவங்கொண்டு வந்து, அவளுக்கு வேண்டிய ஒத்தாசை புரிந்து கொண்டிருந்தார். செட்டிப் பெண்ணும் பிரசவித்துச் சுகமாயிருந்தாள்.

சிலநாட்களுக் கெல்லாம் காவிரியாற்றில் வெள்ளம் குறையவே, அப்பெண்ணின் தாய் மிக்க கவலையோடு பெண்வீடு வந்துசேர்ந்தாள். உடனே, தாயுருக்கொண்டு உதவி புரிந்துவந்த சங்கரர் மறைந்துவிட்டார். தாய் தன்பெண்ணின் க்ஷேமத்தை விசாரித்தாள். தனக்கு அதுவரையில் பக்கத்திலிருந்து பணிசெய்து வந்தவர் பரம சிவனே என்பது அப்போதுதான் அப்பெண்ணுக்குத் தெரிந்தது. அவளும் அவள் தாயும் கடவுளின் கருணையை நினைந்து மனம் உருகித் துதித்தார்கள். கடவுள் யாவருக்கும் தந்தையாய் விளங்கி வருவதோடு, இப்பெண்மணிக்குத் தாயாகவும் வந்து உதவி செய்தமையால், அவருக்குத் தாயுமானவர் என்ற பெயர் ஏற்பட்டது.

அவர் ‘ தாய்தந்தை பல்லுயிர்க்கும் தாமே ஆய தலைவனார்.’

கேள்விகள் :—மலைக்கோட்டையின் மீது ஏற என்ன சாதகங்கள் இருக்கின்றன? மலைக்கோட்டைக் கோயிலில் உள்ள சுவாமிக்குத் தாயுமானவர் என்ற பெயர் ஏன்வந்தது?

கடின பதங்கள்:—ஸ்தூபி, கணவன், வழிபட்டு, முறையிடு, ஒத்தாசை, பணிசெய்து, கருணை, உருகி, பெண்மணி.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# 20. சென்னை மிருகக் காட்சிச்சாலை.

முன் ஒரு பாடத்தில் சென்னைப் பொருட் காட்சிச் சாலையை (மியூஸியத்தை)ப் பற்றிப் படித்தீர்கள். இப்பொழுது அப்பட்டினத்திலுள்ள மிருகக் காட்சிச்சாலையைப் பற்றித் தெரிந்துக் கொள்ளுங்கள்.

இந்த மிருகக் காட்சிச்சாலை மூர் மார்க்கெட்டுக்குப் பின்னுல் இருக்கிறது. இதைச் சென்னை நகரபரிபாலன சபையார் நிருவகித்து வருகிருர்கள். இங்கு உயிருள்ள மிருகங்கள் இருப்பதால் இதைப் பலர் 'உயிர்க்காலேஜ்' என்றும் சொல்லுவார்கள். இதனுள் சென்று பார்க்க விரும்பும் ஒவ்வொருவரும் ஒரு அணு கட்டணம் செலுத்தி உள்ளே போகவேண்டும்.

உள்ளே சென்றதும் முன்பாகத்தில் சிறுத்தை, கரடி, கழுதைப்புலி முதலிய காட்டுப் பிராணிகள் கூண்டுகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இக்கூண்டுகளுக்கு அடுத்த இடத்தில் மலைப்பாம்புக் கென்று ஒரு கூண்டும், குழிமுயல்



சென்னை மிருகக் காட்சிச்சாலையில் இருக்கும் சில மிருகங்கள்.

கள் பல வசிக்கக்கூடிய ஒரு சிறு கட்டடமும் இருக்கின்றன.

இவைகளுக்குச் சிறிது தூரத்தில் இருப்பது சிங்கங்களுக்கென்று தனியாய் அமைந்துள்ள ஒரு அழகிய கட்டடம். இங்கே சிங்கங்கள் கூடிய வரையில் உல்லாசமாய் உலாவித்திரியலாம். மழை பெய்யும் காலங்களில் கட்டடத்திற்குள் தங்கி விடலாம். சிங்கத்திற்கு மிருகேந்திரன் என்ற பெயருண்டல்லவா? அதற்கு ஏற்றபடி கட்டடமும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு அடுத்த பாகங்களில் கோவேறு கழுதை, தீப்பறவை, முதலியவைகளுக்குத் தனித் தனி இடம் உண்டு. வேங்கைப் புலிக்கென்று தனியே ஒரு கட்டடமும் இருக்கிறது.

இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு மற்றொரு புறம்சென்றால், அழகான மயில்கள், கிளிகள், புறக்கள், கொக்குகள், வாத்துகள் முதலியன வசிப்பதைக் காணலாம். இங்குள்ள பறவைகளில் பலவற்றை நாம் வேறிடங்களில் காண இயலாது.

இவ்விடத்திற்கு அருகில் பலவகைக் குரங்குகள் இருக்கின்றன. இக்குரங்குகளுக்கு, உங்களைப் போன்ற சிறுவர்கள் பலர் தின்பண்டங்கள் வாங்கி அளிப்பார்கள். இங்கிருந்து சிறிது தொலையில் ஒரு பெரிய தொட்டி போன்ற கட்டடம் உண்டு. நீர் நிறைந்துள்ள அதில், பல முதலைகளைக் காணலாம். இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு

இன்னும் சிறிது தூரம் சென்றால், ஓரிடத்தில் ஒட்டகமும், யானையும் நிற்பதைப் பார்க்கலாம். அதையும் தாண்டிச்சென்றால், ஓரிடத்தில் புள்ளி மான்கள், கலைமான்கள் முதலியன தம் விருப்பப் படி திரிவதைக் காணலாம்.

இவைகளைத்தவிர, சீமை அணில், வெள்ளெலி, புனுகுப்பூனை முதலியனவும் ஒவ்வோரிடத்தில் உள்ளன.

இத்தனை உயிர்களையும் தனித்தனி கவனித்து ஆகாராதிகள் கொடுத்துக் காத்து வரவேண்டுமல்லவா? இதற்கென்று பல ஆட்களை நகரபரிபாலன சபையார் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவர்கள், காட்டுப்பிராணிகளின் சமீபத்தில் ஜனங்கள் செல்லவொட்டாமலும் பார்த்து வருகிறார்கள்.

இந்தக் காட்சிச்சாலையை நீங்கள் எப்போதாவது ஒரு சமயம் பார்த்து வருவது அவசியம்.

கேள்விகள்:—காட்சிச்சாலையில் பலவகைப்பட்ட மிருகங்கள், பறவைகள் முதலியவற்றை வளர்த்து வருவதன் நோக்க மென்ன? இவை நகரபரிபாலன சபையாருக்கு எங்கிருந்து கிடைக்கின்றன? காட்டுமிருகங்களை ஏன் கூண்டில் அடைத்து வைக்கவேண்டும்?

கடின பதங்கள்:—பரிபாலனம், நிருவகித்து, மிருகேந்திரன், இயலாது, ஆகாராதிகள்.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# 21. நடவும் அறுவடையும்.

முன்னொரு பாடத்தில் நிலத்தை எப்படி உழுது பண்படுத்தி எருவிட்டுப் பயிர் செய்ய வேண்டுமென்று சொன்னோம். இப்பொழுது எப்படிப் பயிரிட்டு அறுவடை செய்வது என்பதைக் கவனிப்போம்.

தானியங்கள் இரண்டு வகைப்படும். அவை நன்செய் தானியங்கள், புன்செய் தானியங்கள். சோளம், கம்பு, வரகு, துவரை, கேழ்வரகு முதலியன புன்செய் தானியங்களாகும். இவைகளைப் பயிர்செய்ய அதிக நீர் வேண்டுவதில்லை. நெல், கோதுமை முதலியன நன்செய் தானியங்களாகும். இவைகளைப் பயிரிட அதிக ஜலமும் தகுந்த வெப்பமும் வேண்டும்.

நன்செய் தானியங்களைப் பயிர் செய்வது எப்படி என்பதும் நமக்குத் தெரியவேண்டும் அல்லவா ? நன்றாய் உழுது பண்படுத்தி எருவிட்ட நிலத்தில் விவசாயிகள் முதலில் விதை விதைப்பார்கள். நாற்று வளர்ந்ததும் அதைப் பறித்து, பண்படுத்திய வேறு நிலங்களில் பின்பு நடுவார்கள். இப்பயிர் நன்றாய் வளரும் வரையில் வெகு ஜாக்கிரதையாய் நீர்பாய்ச்சிக் களைபிடுங்கி வருவார்கள். பயிர் நன்றாய் வளர்ந்ததும் கதிர் விடும். பின்பு சிறிது நாட்களில் கதிர் முற்றிப்

பழுக்கும். இந்தச் சமயத்தில்தான் அறுவடை செய்யவேண்டும்.



அறுவடை செய்யும் வேலையாட்கள், முற்றிய கதிர்களை அறுத்துக் கட்டுக்கட்டாகக் கட்டிக் களத்துக்குக் கொண்டு போவார்கள். அங்கே அவைகளை அடித்து, நெல் வேருகவும் வைக்கோல் வேருகவும் பிரித்துப் போர்போடுவார்கள். பிறகு, நெல்லை நன்ருய்த் தூற்றிப் பதர்களைப் போக்கி விட்டு, மூட்டை மூட்டைகளாகக் கட்டி வீட்டுக்கு எடுத்துச் செல்லுவார்கள். இப்படி எடுத்துச்

செல்லப்பட்ட நெல்லைக் குத்தியே, நாம் நம் உண வுக்கு வேண்டிய அரிசியைப் பெறுகிறோம்.

நமது இராஜதானியின் வடபாகத்தில் வசிக் கும் விவசாயிகள் நெற்கதிர்களை அடித்து நெல் லைப் பிரிப்பதில்லை. வயலிலிருந்து கொண்டு வரப் படும் கதிரோடு கூடிய தாள்களை, கதிர்ப் பக்கம் உள்ளே சேர்ந்திருக்கும்படியும், தாள்பக்கம் வெளி யே நீட்டிக் கொண்டிருக்கும்படியும் வைத்து, பெரிய போராகப் போடுவார்கள். இப்படிப் போடும் போர் சுமார் இரண்டு மாதகாலம் வரை யில் கலையாமல் இருக்கும். பிறகு, அந்தத் தாள் களை எடுத்துப் புணை மாடுகளின் அடியில் இட்டு, நெல் வேறாகவும் வைக்கோல் வேறாகவும் பிரிப் பார்கள். அப்பால், பிரிந்த நெல்லைத் தூற்றிப் பூமிக்குள் பள்ளம் வெட்டி, அதில் போட்டு மூடு வார்கள். இந்த நிலையில் நெல் சுமார் ஒன்றரை மாதகாலம் இருக்கும். பிறகு நெல்லை வெளியி லெடுத்துக் குத்தி அரிசியாக்குவார்கள். இப்படிச் செய்வதால் நெல்லில் பசுமைத் தன்மை மாறி விடும்; அது உணவுக்கு ஏற்றதாகிப் பழுப்பு நிறத்தை அடையும்.

நம் நாட்டில் வயல்கள் சிறியவையாய் இருப்ப தால், மனிதர்களே அறுவடை செய்கிறார்கள். மேல் நாடுகளிலோ, வயல்கள் பெரியவையாய் இருக்கும். ஆகவே, அங்குள்ளோர் இயந்திரங் களைக் கொண்டே சகல காரியங்களையும் செய்து

கொள்ளுகிறார்கள். உழுவதற்கும், அறுவடை செய்வதற்கும், கதிர்களைக் கும்பலாகச் சேர்ப்ப தற்கும், நெல் வேறாகவும் வைக்கோல் வேறாகவும் பிரிப்பதற்கும் அவர்கள் தனித்தனி இயந்திரங் களைக் கண்டுபிடித்து வைத்துக்கொண்டு இருக் கிறார்கள்.

கேள்விகள் :—புன்செய் நிலங்களுக்கு வேண்டிய நீர் எவ்வாறு கிடைக்கிறது? பயிர்களுக்குக் களை பிடுங்குவ தேன்? முன் காலத்தில் எவ்வாறு நெல்லைக் குத்தி அரிசி எடுத்தார்கள்? இப்பொழுது எப்படி எடுக்கிறார்கள்? அரிசி நீங்கின நெல்லுக்கு என்ன பெயர்? அதன் பிரயோஜனம் என்ன? நம் நாட்டில் விவசாயம் செய்ய இயந்திரங்களை யார் உபயோகிக்கக்கூடும்?

கடின பதங்கள்:—பண்படுத்தி, விவசாயி, களம், புணை மாடு, இயந்திரம்.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றை யும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# 22. பழனி.

முருகக் கடவுள் எழுந்தருளியுள்ள தலங்கள் பல. அவைகளுள் பழனி என்பது மிகச்சிறந்த ஒரு தலம். இது மதுரை ஜில்லாவில் இருக்கிறது. முன்பு, பழனிக்கு யாத்திரை செய்ய வேண்டு மென்றால், ரெயிலேறி திண்டுக்கல் போய், அங்கி ருந்து வாடகை மோட்டாரில் செல்ல வேண்டி



யிருந்தது. இப்போதோ, பழனிக்கே நேராக இருப்புப் பாதை போகிறது.

பழனியில் ஒரு மலை இருக்கிறது. அம்மலையின் மீதுதான் பழனியாண்டவர் என்னும் திருப்பெயருடன் முருகக் கடவுள் கோயில் கொண்டிருக்கிறார். அவரைத் தரிசித்துத் தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் வருவார்கள். சிலர் தம் நோய் தீரப் பிரார்த்தித்துக் கொண்டவர்களாய் இருப்பார்கள். சிலர் தம் குழந்தைகளுக்கு முடிகொடுக்கப் பிரார்த்தித்துக் கொண்டவர்களாய் இருப்பார்கள். இப்படி அவரவர் செய்யும் பிரார்த்தனைகள் பல விதமாய் இருக்கும்.

நமது நாட்டில் குழந்தைகளுக்கு முடி கொடுப்பது என்ற ஒரு வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. குழந்தைக்கு இரண்டு மூன்று வயதானதும், பெற்றோர்கள் அதைத் தாங்கள் வேண்டிக் கொண்ட க்ஷேத்திரத்திற்கு எடுத்துச் சென்று முடிகொடுப்பார்கள். இவ்வாறு முடி கொடுக்கப்பெறும் தலங்கள் நம் தமிழ் நாட்டில் பல உள. அவைகளில் பெருஞ் சிறப்பு படைத்தவைகளுள் இந்தப் பழனித் தலமும் ஒன்றாகும்.

இவ்வூருக்கு அநேக யாத்திரிகர்கள் வருவதால், அவர்கள் தங்குவதற்கு என்று பல சத்திரங்கள் இங்குக் கட்டப்பட்டிருக்கின்றன. இச் சத்திரங்களில் அவர்கள் தங்கி, ஆண்டவனைத் தரிசித்துத் தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்திவிட்டு ஊர் திரும்புவார்கள்.

இவ்வூரில் ஷண்முகநதி என்றொரு புண்ணிய நதி ஓடுகிறது. யாத்திரிகர்கள் இந்த நதியில் நீராடிய பின்பே, பகவானைத் தரிசிக்க மலைமேல் ஏறுவார்கள். அவர்கள் தங்கள் தங்கள் இயல்புக்கு ஏற்றபடி, கடவுளுக்கு அபிஷேகமும் செய்து வைப்பார்கள். பஞ்சாமிருதம், சந்தனம், விபூதி முதலியவைகளால் அபிஷேகம் இங்கு மிகுதியாய் நடைபெறும். பழனிப் பஞ்சாமிருதமும், விபூதியும் பெரும் பிரசித்தி பெற்றவையாகும். பழனி ஆண்டவரது அபிஷேகக் காட்சி நாஸ்திகர்களையும் ஆஸ்திகர்களாக்கும் என்று பலர் சொல்லுவார்கள்.

தினந்தோறுமே பழனி ஆண்டவருக்குப் பூஜை, அபிஷேகம் முதலியன சிறப்பாய் நடைபெறுகின்றன. என்றாலும், பங்குனி உத்திரத் திருவிழாக் காலத்தில் நடைபெறும் பூஜை, அபிஷேகம் முதலியவை பெருஞ் சிறப்பு உடையவை. அப்போது தரிசிக்கப் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் வருவார்கள். அவர்களுள் பலர் காவடியெடுத்துப் பிரார்த்தனை செலுத்துவது முண்டு.

கேள்விகள் :—முருகக் கடவுள் எழுந்தருளியுள்ள வேறு சில தலங்கள் எவை? குழந்தைகளுக்கு முடி கொடுக்க ஜனங்கள் போகும் வேறு சில தலங்கள் எவை? பழனியில் ஓடும் நதிக்கு ஷண்முகநதி என்ற பெயர் எப்படிப் பொருந்தும்? பழனிப் பஞ்சாமிருதம் எதனால் செய்கிறார்கள்? காவடிகளில் எத்தனை வகையுண்டு?

கடின பதங்கள் :—திருப்பெயர், பிரார்த்தனை, முடி கொடுக்க, தொன்றுதொட்டு, ஆண்டவன், ஷண்முகம், இயல்பு, அபிஷேகம், பஞ்சாமிருதம், விபூதி, பிரசித்தி, அபிஷேகக் காட்சி, நாஸ்திகர், ஆஸ்திகர்.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 23. சுகாதாரம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நமது உடம்பு நோய்க்குட்படாமல் இருந்தால் தான் நாம் சுகமாய் வாழலாம். ஆகவே நாம் நமது உடம்பை வெகு எச்சரிக்கையோடு காப்பாற்றி வரவேண்டும்.

கீழ்க்கண்ட விதிகளை நாம் நன்றாய்க் கவனித்து அவற்றின்படி ஒழுங்காய் நடந்துவந்தால், எவ்வித நோயு மில்லாமல் சுகமாய் வாழலாம்:—

1. தினந்தோறும் இரவில் சீக்கிரமாய்ப் படுக்கைக்குச் சென்று, அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும்.

2. படுக்கைக்குப் போகும்போதும், அதிகாலையில் எழுந்தவுடனும், பற்களை நன்றாய்ச் சுத்தம் செய்யவேண்டும்.

3. ஒவ்வொரு நாளும் நன்றாய்த் தேய்த்துக் குளித்து, நம்முடைய சரீரத்தைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளுவதோடு, நமது உடையையும் அழுக்கற்றதாய் வைத்துக் கொள்ளவேண்டும்.

4. சுத்தமான காற்றையே உட்கொள்ள வேண்டும். சுவாசிக்கும்போது மூக்கினாலேயே சுவாசிக்க வேண்டும். வாயினால் மூச்சுவிடக்கூடாது.

5. நாம் வசிக்கும் அறைகளில் சுத்தமான காற்று உலாவி வரும்படி ஜன்னல்களை நன்றாய்த் திறந்து வைக்க வேண்டும்.

6. நாள்தோறும் திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்துவர வேண்டும். உடற்பயிற்சி செய்யும்போது மெதுவாகக் காற்றை உள்ளே இழுத்து மெதுவாக வெளிவிடும் வழக்கத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

7. நடக்கும்போது கைகளை வீசி நடக்க வேண்டும்.

8. மிகவும் சுத்தமான உணவையே புசிக்க வேண்டும். மென்று தின்னக்கூடிய பண்டங்களை நன்றாய் மென்றே தின்ன வேண்டும்.

9. சுத்தமான நீரையே குடிக்கவேண்டும். படுக்கச் செல்வதற்கு முன்பு கொஞ்சம் நீர் பருகுவது நல்லது.

10. நிற்கும்போதும், உட்காரும்போதும் உடல் நிமிர்ந்திருக்க வேண்டுவது அவசியம்.

11. தினம் ஒரு முறையாவது, குறித்த காலத்தில், ஒழுங்காய் மலங் கழியும்படி கவனித்துக் கொள்ள வேண்டும்.

நமது சரீரசுகத்தைக் காப்பாற்றிக் கொள்ள இவைகளைத் தவிர மற்றும் பல விஷயங்களையும் கவனிக்க வேண்டியது உண்டு. இருந்த போதிலும், முக்கியமாய் மேற்சொன்ன விதிகளை நன்ருய்க் கவனித்து நடந்து வரவேண்டியது வெகு அவசியமாகும்.

கேள்விகள் :—நோய்கள் நமது கவனக் குறைவால் ஏற்படுகின்றன என்பதற்குச் சில உதாரணங்கள் கூறுக. கிராமங்களில் சுகாதாரத்தைக் கெடுக்கும் பழக்க வழக்கங்கள் எவை? அவற்றை ஒழிக்க நாம் என்ன செய்ய வேண்டும்? நமது ஆரோக்கியம் நாம் உண்ணும் உணவு, பருகும் நீர், சுவாசிக்கும் காற்று இவற்றை எவ்வாறு ஒட்டியுள்ளது?

கடின பதங்கள் :—வாழ்வு, விதி, சுவாசி, உடற்பயிற்சி, பருகுவது, சரீரசுகம்.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

## 24. ஸ்ரீ ஆண்டாள்.

தமிழ் ஜில்லாக்களுள் ஒன்ருகும் இராமநாதபுரம் ஜில்லாவில், ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் ஒரு சிறு பட்டணம் இருக்கிறது. இது ஒரு புண்



ணிய தலமாகும். இங்கு ஒரு பெரிய கோயில் உள்ளது. அதில் எழுந்தருளி இருக்கும் முக்கிய மான தெய்வங்கள் மகாவிஷ்ணுவும் ஸ்ரீ ஆண் டாளுமாவர். ஸ்ரீ ஆண்டாளின் சரித்திரத்தைக் கேட்டிருக்கிறீர்களா?

ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வார் என்ற ஒரு விஷ்ணுபக்தர் இருந்தார். அவர் தரும நெறி தவறுதவர். எப்பொழுதும் பெருமாளையே தியானித்துக் கொண்டிருப்பவர். அவருடைய

அருமை மகளே ஸ்ரீ ஆண்டாள். பெரியாழ்வார் தினந்தோறும் நந்தவனத்திலுள்ள மலர்களைப் பறித்து மாலையாகத் தொடுத்துப் பெருமாளுக்குச் சமர்ப்பிப்பது வழக்கம்.

இவர் இப்படி இருக்க, ஆண்டாள் தன் இளமையிலேயே பெருமாளிடத்தில் பேரன்பு கொண்டாள். அவரையே மணந்து கொள்ள ஆசைப்பட்டு, அவரையே எப்பொழுதும் தியானித்து வந்தாள். பெரியாழ்வார் பெருமாளுக்கென்று தொடுத்து வைத்த மாலையை, அவர் இல்லாத சமயத்தில், ஆண்டாள் முதலில் தன் குழலிலே தரித்துக் கொண்டு, தன் கோலம் பெருமாளுக்குப் பிரியமாயிருக்குமா என்று பார்த்துவிட்டு, தந்தை வருவதற்குள் களைந்து முன் போலவே செண்டாகச்சுற்றி நலங்காமல் வைத்து வந்தாள். பெரியாழ்வார் இதனை அறியாமல், மாலையைப் பெருமாளுக்குச் சாத்தி வந்தார். ஒரு நாள் ஆண்டாள் மலர் மாலையைச் சூட்டிக் கொண்டிருந்தபோது, தந்தையார் வந்து விட்டார். வந்தவர் அதனைப் பார்த்து அதிக கோபங் கொண்டு, நங்கைக்கு நற்புத்தி புகட்டி விட்டு, மற்றொரு புதிய மாலை கட்டிப் பெருமாளுக்குச் சூட்டப் போனார். ஆனால் பகவான் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர், "ஆண்டாள் சூடிய மாலையே வேண்டும்" என்று கனவில் அருளிச் செய்தார்.

இதைக் கேட்ட பெரியாழ்வாரும் மற்ற பெரியோர்களும் ஆண்டாளிடத்து மிக்க அன்பும் மரியாதையும் காட்டி நடந்துகொண்டார்கள். ஸ்ரீரங்கநாதர் பின்பு அந்த நங்கையின் பக்திக்கு மெச்சி, அவளைத் தம் கோயிலுக்கு வரச்செய்து மணந்து கொண்டார்.

பெருமாளுக்கு உரிய மலர் மாலையைத் தான் சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு கொடுத்த காரணத்தால், ஆண்டாளுக்கு "சூடிக் கொடுத்த நாச்சியார்" என்ற பெயர் வழங்கலாயிற்று.

ஆண்டாள் என்னும் இந்தப் பெண்ணரசியார், தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்றாய்க் கற்று, 'திருப்பாவை', 'நாச்சியார் திருமொழி' என்ற திவ்வியப் பிரபந்தங்களை இயற்றியுள்ளார்.

கேள்விகள் :—ஆண்டாள் சரித்திரத்திலிருந்து நீ கற்றுக் கொள்ளும் நீதி என்ன? அவருக்குச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற பெயர் எப்படி வந்தது?

கடின பதங்கள் :— நெறி, நந்தவனம், சமர்ப்பி, பேரன்பு, மணந்து, நலங்காமல், நங்கை, நற்புத்தி, ஏற்றுக்கொள், அருளிச்செய்தார், இலக்கியம், பிரபந்தம்.

வியாசம் :—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.




# 25. தபாலாபீஸ்.

இந்தப் படத்தைப் பாருங்கள். இது ஒரு தபாலாபீஸ். இங்கு என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன என்றும், தபாலாபீஸினால் ஜனங்களுக்கு என்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்றும் கவனிப்போம்.

இதோ, ஆபீஸ் வாயிலில் ஒருவன் ஒரு பெட்டியை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். இங்கு, 'தபால் பில்லைகள் விற்குமிடம்' என்று எழுதியிருக்கிறது. நாம் வெளியூரிலிருக்கும் ஒருவருக்குக் கடிதம் எழுத விரும்பினால், முதலில் சமாசாரத்தை ஒரு கடிதத்தில் எழுதி, அதை ஒரு உறை

யில் இட்டு, மேல் விலாசம் எழுத வேண்டும். அதன் பின் உறைமேல் ஒன்றே காலணா பில்லை வாங்கி ஒட்டவேண்டும். பின்பு அதை ஆபீஸுக்கு வெளியே காணப்படும் தபாற் பெட்டியில் போட்டால், அது நாம் குறிப்பிட்ட ஊருக்குப் போகும். அதோ, படத்தில் ஒருவன் பெட்டியில் கடிதத்தைப் போடுவதைப் பாருங்கள். இன்னும் கார்டுகளும், பார்ஸல், தந்தி முதலியன அனுப்புவதற்குப் பில்லைகளும் இங்குத்தான் வாங்க வேண்டும்.

உள்ளே ஒருவர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார். அவர்தான் போஸ்ட் மாஸ்டர். அவர் பக்கத்தில் ஒரு சேவகன் நிற்பதைப் பாருங்கள். போஸ்ட் மாஸ்டர் தபாலாபீஸில் நடக்கும் விஷயங்களை மேற்பார்வை யிடுவார்.

இடது கைப்புறத்தில் நான்கு திட்டிகள் வைத்திருக்கும் இடத்தைப் பாருங்கள். அங்கு நான்கு உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். முதலிலிருப்பது ரிஜிஸ்தர் செய்யுமிடம். அனுப்பும் தபால் தவறாமல் போய்ச் சேரவேண்டுமானால், நாம் அதிக கட்டணம் செலுத்தி, இங்கு ரிஜிஸ்தர் செய்யலாம். ரிஜிஸ்தர் செய்யும் உத்தியோகஸ்தர் தராசில் கடிதத்தை நிறுத்துக் கொண்டிருப்பதைப் பாருங்கள். ரிஜிஸ்தர் செய்தால் இவ்வுத்தியோகஸ்தர் நமக்கு ரசீது கொடுப்பார். ரிஜிஸ்தர் கட்டணத்தோடு கூட, ஒரு அணா கட்டி

ஞல், கடிதமோ, பார்ஸலோ விலாசதாருக்குப் போய்ச் சேர்ந்ததற்கும் நமக்கு ஒரு ரசீது கிடைக்கும்.

அதற்கு அடுத்தாற்போல் 'மணியார்டர்' என்று எழுதியிருக்கிறது. நாம் வெளியூரி லிருப்பவர்களுக்குப் பணம் அனுப்ப வேண்டுமானுல், இங்கு ஒரு பாரத்தை எழுதிக்கொடுத்துப் பணத்தையும், கூலியையும் கொடுக்க வேண்டும். உடனே இங்குள்ள உத்தியோகஸ்தர் நமக்கு ஒரு ரசீது கொடுப்பார். விலாசதாருக்குப் பணம் போய்ச் சேர்ந்ததும் நமக்கு ஒரு ரசீது வரும்.

மணியார்டருக்கு அடுத்தாற்போல் பார்ஸல் பிரிவு இருக்கிறது. இங்குத்தான் பார்ஸல்களை ரிஜிஸ்தர் செய்தோ அல்லது சாதாரணமாகவோ அனுப்புவதற்காக வாங்கிக் கொள்வார்கள்.

அதற்கு அடுத்தாற்போல் 'தந்திகள்' என்று குறித்திருக்கிறது. ஒவ்வொரு பெரிய தபாலாபீஸிலும் தந்தியாபீஸும் இருக்கும். நாம் அவசரமாய் ஒரு சமாசாரத்தை வேற்றூரிலிருக்கும் ஒருவருக்குத் தெரிவிக்க விரும்பினுல், தந்தி மூலமாய்த் தெரிவிக்கலாம். இங்கு ஒரு பாரத்தை வாங்கி விலாசத்தையும், சமாசாரத்தையும் எழுதி, கட்டவேண்டிய பணத்திற்குப் பில்லைகள் வாங்கி ஒட்டி, பாரத்தை இங்குள்ள உத்தியோகஸ்தரிடம் கொடுக்க வேண்டும். அவர் நமக்கு ஒரு ரசீது கொடுத்துவிட்டுச் சமாசாரத்தைக் குறிப்பிட்ட

ஊருக்குத் தந்தி மூலமாய்த் தெரிவிப்பார். அங்குள்ள உத்தியோகஸ்தர் அதை ஒரு காகிதத்தில் எழுதி, சேவகன் மூலமாய் விலாசதாருக்கு அனுப்புவார்.

நாம் மிகுத்தக்கூடிய சிறு தொகைகளைச் சேமித்து வைக்கத் தபாலாபீஸில் ஒரு இடம் இருக்கிறது. இதற்கு 'ஸேவிங்ஸ் பாங்கு' என்று பெயர். நாம் இங்குச் செலுத்தும் பணம் பத்திரமாயிருக்கும். நமக்குக் கொஞ்சம் வட்டியும் கிடைக்கும். வேண்டும்போது இதிலிருந்து நாம் பணத்தை வாங்கிக் கொள்ளலாம்.

இப்படி எல்லாம் தபாலாபீஸில் மிகவும் பொறுப்பான வேலைகள் நடைபெறுகின்றன. அவைகளால் நமக்குப் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

கேள்விகள் :—நாம் எழுதிப் போடும் கடிதங்கள் வெளியூர்களுக்கு எப்படிப் போகின்றன? வெளியூர்க் கடிதங்கள் நமக்கு எப்படி வருகின்றன? ஒரு கடிதத்தைப் பார்த்து அது எவ்வூரிலிருந்து எவ்வூருக்கு வந்திருக்கிறதென்று எப்படிச் சொல்லலாம்? கடிதங்களை ரிஜிஸ்தர் செய்வதின் நோக்கமென்ன? தபாலாபீஸினால் உண்டாகும் நன்மைகள் யாவை?

கடின பதங்கள் :—சமாசாரம், உறை, மேற்பார்வை, திட்டி, வேற்றூர், சேமித்து, பத்திரம், பொறுப்பான.

வியாசம்:—மேற்கண்ட சொற்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

# செய்யுள் திரட்டு.

## கொன்றை வேந்தன்.

(ஔவையார் அருளியது)

### காப்பு.

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் நாமே.

### நூல்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்.
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.
கற்பெனப் படுவது சொல்திறம் பாமை.
கிட்டாதாயின் வெட்டென மற.
கீழோராயினும் தாழ உரை.
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
கூரம் பாயினும் வீரியம் பேசேல்.
கெடுவது செய்யின் விடுவது கருமம்.

கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி.
கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு.
சீரைத் தேடின் ஏரைத் தேடு.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்.
சேமம் புகினும் யாமத் துறங்கு.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.
திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
தீராக் கோபம் போராய் முடியும்.
தெய்வஞ் சீறின் கைதவம் மாளும்.
தேடாது அழிக்கின் பாடா முடியும்.
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
தோழ னோடும் ஏழைமை பேசேல்.
நல்லிணக்க மல்லது அல்லல் படுத்தும்.
நாடு எங்கும் வாழக் கேடு ஒன்று மில்லை.
நிற்கக் கற்றல் சொல்திறம் பாமை.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு.
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சக மில்லை.
நேரா நோன்பு சீரா காது.
நைபவ ரெனினும் நொய்ய உரையேல்.
நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை.
பாலோ டாயினும் காலம் அறிந்துண்.
பிழையது பொறுக்கின் பெரியோ ராவர்.

புலையும் கொலையும் களவும் தவிர்.
பேதைமை என்பது மாதர்க் கணிகலம்.
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
போனகம் என்பது தானுழந்து உண்டல்.
மருந்தோ டாயினும் விருந்தோ டுண்.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்.
மேழிச் செல்வம் கோழை படாது.
மொழிவது மறுக்கின் அழிவது கருமம்.
மோனம் என்பது ஞான வரம்பு.
வளவ னாயினும் அளவறிந்து அழித்துண்.
வானம் சுருங்கின் தானஞ் சுருங்கும்.
உரவோர் என்கை இரவாது இருத்தல்.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை.
வையந் தோறும் தெய்வம் தொழு.
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.

# வெற்றிவேற்கை.

(அதிவீரராம பாண்டியர் அருளியது)

### காப்பு.

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணஅற் புதமலர் தலைக்கணி வோமே.

### நூல்.

1 எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.
2 கல்விக்கு அழகு கசடுஅற மொழிதல்.

3 வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்.
4 மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை.
5 வைசியர்க்கு அழகு வளர்பொருள் ஈட்டல்.
6 உழவர்க்கு அழகு ஏர் உழுதூண் விரும்பல்.
7 மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல்.
8 தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை.
9 உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.
10 அறிவோர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்.
11 வறியோர்க்கு அழகு வறுமையிற் செம்மை.
12 தேம்படு பனையின் திரள்பழத்து ஒருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவற்கு இருக்க நிழலா காதே.
13 தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
தெண்ணீர்க் கயத்துள் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலா கும்மே.
14 (அதனால்,) பெரியோ ரெல்லாம் பெரியரும் அல்லர்.
15 சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.
16 பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்.
17 உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்.
18 அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
19 சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது.
20 அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது.
21 புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
22 கலக்கினும் தண்கடல் சேறு ஆகாதே.
23 அடினும் பால்பெய்து கைப்பு அறாது பேய்ச்சுரைக்
24 ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாதே. [காய்.
25 ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

26 நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
27 பெருமையுஞ் சிறுமையும் தான்தர வருமே.
28 சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.
29 சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.
30 கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.
31 கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே.
32 நாற்பால் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.
33 எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடிக் கற்றோரை மேல்வரு கென்பர்.
34 அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்.
35 அச்சமுள் ளடக்கி அறிவகத்து இல்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சமற்று ஏமாந்து இருக்கை நன்றே.
36 யானைக் கில்லை தானமும் தருமமும்.
37 பூனைக் கில்லை தவமும் தயையும்.
38 ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
39 சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.
40 முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.
41 அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
42 நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
43 கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.
44 உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
45 குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்.

46 சிறப்புஞ் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
47 அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடு இருந்து அரசாளினும் ஆளுவர்.
48 குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
49 எழுநிலை மாடங் கால்சாய்ந்து உக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.
50 பெற்றமுங் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.
51 இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே.
52 இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே.
53 தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கு அஞ்சும்மே.
54 கொடுங்கோல் மன்னர் வாழு நாட்டில்
கடும்புலி வாழுங் காடு நன்றே,
சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே.
55 முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்து
அதன்பயன் உண்ணா வணிகரும் பதரே.
56 வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்துஅங்கு இருக்கும் ஏழையும் பதரே.
57 தன்னா யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.
58 வாய்ப்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்:
59 பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.
60 மெய்யுடை ஒருவன் சொலமாட்டாமையால்

பொய்போ லும்மே பொய்போ லும்மே.
61 துணையோ டல்லது நெடுவழி போகேல்.
62 புணைமீ தல்லது நெடும்புனல் ஏகேல்.
63 வழியே ஏகுக வழியே மீளுக.
64 வாழிய நலனே வாழிய நலனே.

# தோத்திரத் திரட்டு.

## விநாயகர் துதி.

திருவாக்கும்; செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்;—உருவாக்கும்.
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

## சரஸ்வதி சிந்தனை.

புத்தகத்துள்ளுறை மாதே!
பூவிமலர்ந்துறை வாழ்வே!
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்!
வேதப்பொருளுக் கிறைவி!
முத்தின் குடையுடையாளே!
மூவுலகுந்தொழு தேவி!
* * * *
* * * *

முத்துநிறைத்த வெண்பல்லாய்!
முருக்கம்பூமேனி நிறத்தாளே!

தக்கோலந்தின்ற துவர்வாயாய்!
சரஸ்வதி என்னுந் திருவே!
எக்காலுமுன்னைத் தொழுவோம்!
எழுத்தறிபுத்தி பண்ணிவைப்பாய்!
ஆக்காய் எம்பெருமாட்டி!
அழகிய பூவணைமீதாய்!
நோக்காய் என்மிடிதீர
நொடிக்கும் பிராமணத்தி! நோக்காயே
சாலுநெல்லரிசி கொண்டு
சரஸ்வதிபூசை பண்ணி
பாலொடுபழத்தை நிறப்பிப்
பராவித்தொழுவோம் நங்காய்!
நங்காய்! நங்காய்! நமோஸ்து.
ஞானக்கொழுந்தே! நமோஸ்து.
கல்விக்கரசே! நமோஸ்து.
கணக்கறிதேவி! நமோஸ்து.
சொல்லும்பொருளே! நமோஸ்து.
சூக்ஷ்மரூபி! நமோஸ்து.

## சிவபெருமான் துதி

பொன்னார் மேனியனே! புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே!
மன்னே! மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே! உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே?

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே!

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே!
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே!
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே!
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே!
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!
எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே!
என்னரசே! யான்புகலும் இசையுமணிந் தருளே.

## திருமால் துதி.

குலந்தரும்; செல்வம் தந்திடும்;
அடியார் படுதுய ராயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும்; நீள்விசும் பருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலந்தரும்; மற்றுந் தந்திடும்;
பெற்ற தாயினும் ஆயின செய்யும்;
நலந்தருஞ் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

நாகத் தணையானை நாள்தோறும் ஞானத்தால்
ஆகத் தணைப்பார்க்கு அருள்செய்யும் அம்மானை
மாகத் திளமதியம் சேரும் சடையானைப்
பாகத்து வைத்தான்தன் பாதம் பணிந்தேனே.

பச்சைமா மலைபோல்மேனிப் பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம்ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

## முருகர் துதி.

மூவிரு முகங்கள் போற்றி; முகம்பொழி கருணை போற்றி; ஏவரும் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி; காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி; அன்னான் சேவலும் மயிலும்போற்றி; திருக்கைவேல் போற்றிபோற்றி.

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே.
உ த்தமா! தானசற் குணர் நேயா!
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா!
வித்தகா! ஞானசத் தினிபாதா!
வெற்றிவே லாயுதப் பெருமாளே!

86229

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியைம ணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்.
ஆதி அருணாசலம் அமர்ந்தபெரு மாளே!

TB
031(3)
N33

PRINTED AT THE INTERNATIONAL PRINTING WORKS, G.T., MADRAS.

# தமிழ்நாட்டு நவீன வாசக புத்தகங்கள்.

தற்காலத்தில் நம் தமிழ் நாட்டு மாணவர்கள் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய பல அரிய விஷயங்கள் இவ்வரிசையைச் சார்ந்த வாசகங்களில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவற்றில், தமிழ்மொழியின் அருமையும், முன்னோர்களின் பெருமையும், தமிழ் நாட்டின் சிறப்பும் நூதன முறைகளோடு தழுவிச் சிறுவர்களுக்கேற்றவாறு கூறப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் மாணவர்களுக்குத் தமிழ் மொழிப்பற்று, தேசாபிமானம், பிரபஞ்ச ஞானம், நல்லொழுக்கம் ஆகிய இவைகளைப் புகட்டும் தகுதி வாய்ந்தவை.

## பொருளடக்கம்

### இரண்டாம் புத்தகம்:— விலை அணா 4.


(1) என் தாய்.
(2) பசு.
(3) உணவு.
(4) பிறவிக் குருடர்கள்.
(5) காவிரி.
(6) லவன், குசன்.
(7) நாய்.
(8) முனிவரும், மானும்.
(9) கிராமஉத்தியோகஸ்தர்கள்.
(10) குழந்தை.
(11) தஞ்சாவூர்ப் பெரிய கோயில்.
(12) கந்தனூர்.
(13) சரஸ்வதி மஹால்.
(14) சந்திரமதி.
(15) தாமரை.
(16) எலுமிச்சம் தோட்டம்.
(17) திருவாரூர்த் தேர்.
(18) கிரிப்பிள்ளையும், குமுதவல்லியும்.
(19) நம்பிக்கை மோசம்.
(20) வியாபாரிகளும் பணப்பையும்.


### செய்யுட்பாடம்:—

உலகநீதி. ஆத்திசூடி.

### தோத்திரத் திரட்டு:—

விநாயகர் அகவல். நடராஜர் நாமாவளி. திருமால் துதி.

## மூன்றாம் புத்தகம்:— விலை அணா 5.

(1) ஆடு. (2) விவசாயம். (3) காவிரி. (4) இராமதாசர். (5) வீட்டு மிருகங்கள் (௧). (6) வீட்டு மிருகங்கள் (௨). (7) வீட்டு மிருகங்கள் (௩). (8) பாறைக்காரன். (9) சென்னைப் பொருட்காட்சிச் சாலை. (10) ரெயில் பிரயாணம். (11) பச்சையப்ப முதலியார். (12) திருஞான சம்பந்தர் தேவாரம் பாடியது. (13) நமது உடை. (14) தீபாவளி. (15) வாசனைப்பொருள்கள். (16) பொள்ளாச்சிச் சந்தை. (17) திருக்கழுக்குன்றம். (18) கிராம பஞ்சாயத்து. (19) திருச்சி மலைக்கோட்டை. (20) சென்னை மிருகக்காட்சிச் சாலை. (21) நடவும் அறுவடையும். (22) பழனி. (23) சுகாதாரம். (24) ஸ்ரீ ஆண்டாள். (25) தபாலாபீஸ்.

### செய்யுட்பாடம்:—

கொன்றைவேந்தன். வெற்றிவேற்கை.

### தோத்திரத் திரட்டு:—

விநாயகர் துதி. சரஸ்வதி சிந்தனை. சிவபெருமான் துதி. திருமால் துதி. முருகர் துதி.

## நான்காம் புத்தகம்:— விலை அணா 6.

(1) யானையும் ஒட்டகமும். (2) நூதன விவசாயக் கருவிகள். (3) காளிதாசன். (4) மதராஸ் மீன்காட்சிச் சாலை. (5) நாரதரும் இராமாயணமும். (6) ஸர் டி. முத்துசாமி ஐயர். (7) இரும்பு, மாங்கனீஸ், அபிரகம். (8) கிராம பரிபாலன சபை (யூனியன்). (9) வண்டிகள். (10) பிரகலாதன். (11) கிராம சுகாதாரம். (12) காஞ்சீபுரம். (13) மதுரைத் தமிழ்ச்சங்கம். (14) அரசமரமும் ஆலமரமும். (15) ஜடாயு. (16) டாக்டர் மில்லர். (17) அதிவீரராம பாண்டியர். (18) சந்தன மரம். (19) பெரியம்மை, வாந்திபேதி. (20) திருப்பதி. (21) நம்மாழ்வார். (22) தூத்துக்குடியும் முத்துக் குளித்தலும். (23) கம்பர். (24) கும்பகோணம் மகாமகம். (25) திருவாதவூரர். (26) வைகை-பெரியாறு. (27) கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள்.

### செய்யுட்பாடம்:—

வாக்குண்டாம். நல்வழி.

### தோத்திரப் பாடல்கள்:—

விநாயகர். சுப்பிரமணியர். சரஸ்வதி. சிவபெருமான். திருமால்.

---

வேதநாயகம் பிள்ளை சமரஸ கீர்த்தனை. விவேகசிந்தாமணி. சித்தர் பாடல். டில்லி பதுரை தேசிங்குராஜனுடைய வளப்பத்தைக் கேட்டல்.

---

**Macmillan's New Tamil Reader III, 5 As.**